வெளியீட்டெண் : 01

சிறுவர்களுக்கான

நாற்பது நபிமொழிகள்

தொகுப்பும் விளக்கமும் :
அச்சேய்க். முஹம்மத் பின் ஸூலைமான் அல்முஹன்னா
(ஸவூதி அரேபியா)

மொழிபெயர்ப்பு :

www.waytojennah.com

முன்னுரை

எல்லாப் புகழும் அல்லாஹ்விற்கே. ஸலவாத்தும் ஸலாமும் எங்கள் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தினர், தோழர்கள் அனைவர் மீதும் உண்டாவதாக.

உலமாக்கள் நாற்பது ஹதீஸ்களைத் தொகுத்து பல நூல்கள் இயற்றியுள்ளனர். அவற்றில் பிரபல்யமானது. இமாம் நவவி நபி (ஸல்) அவர்களின் ஹதீஸ்களிலிருந்து நாற்பது ஹதீஸ்களைத் ஒன்றுசேர்த்துத் தெகுத்த "அல்அர்பஊனன் நவவிய்யா" ஆகும். மாணவர்கள் அவற்றைப் பாடமிட்டு, அவற்றின் அர்த்தங்களைப் புரிந்துகொள்வதற்காக அவர்கள் அதைத் தொகுத்தார்கள்.

இமாம் ஹரவியின் "அல்அர்பஊன் பீ தலாஇலித் தவ்ஹீத்" இமாம் இப்னுல் முபழ்ழலின் "அல்அர்பஊனல் இலாஹிய்யா", இமாம் இப்னு அஸாகிரின் "அல்அர்பஊனல் புல்தானிய்யா" என்பன இவற்றுள் அடங்கும். இவை தவிர இன்னும் நிறைய நூல்கள் உள்ளன.

அல்லாஹ்வுடைய கிருபையின் காரணமாக, எமது பிள்ளைகள் மனனமிட்டு, புரிந்துகொள்ளும் விதத்தில் பல்வேறுபட்ட மார்க்கத் தலைப்புகளிலும் உள்ளடங்கும் சிறிய ஹதீஸ்களிலிருந்து நாற்பது ஹதீஸ்களை நான் ஒன்றுசேர்த்துள்ளேன். அதற்கு, "அல்அர்பஊனல் வில்தானிய்யா" (சிறுவர்களுக்கான நாற்பது ஹதீஸ்கள்) எனப் பெயர் சூட்டியுள்ளேன். அவையனைத்தும், இமாம் புகாரி, இமாம் முஸ்லிம் ஆகியோரின் இரு கிரந்தங்களிலுமோ, ஒன்றிலோ வருபவை.

“அல்அர்பஊனல் வில்தானிய்யா” வின் ஒவ்வொரு ஹதீஸையும், சுருக்கமாகவும், முடியுமான அளவு தெளிவாகவும் அர்த்தம் புரியும் விதத்தில் பொதுவான விளக்கியுள்ளேன்.

அல்லாஹ் அழகான முறையில் இதை ஏற்றுக்கொண்டு, மனனமிடல், கற்றல், தனிமையாக மற்றும் கூட்டாக வாசித்தல், வீடுகளில், சங்கங்களில், பாடசாலைகளில், பள்ளிவாசல்களில், கருத்தரங்குகளும், போட்டிகளும் நடாத்துதல் என்பவற்றின் மூலம் மக்களும் இதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்பது எனது பெரிய ஒரு ஆசையாகும்.

யா அல்லாஹ்! பயனுள்ள அறிவையும், நல்லமல்களையும், நிலையான உதவியையும் எங்களுக்குத் தந்திடுவாயாக!

صلى الله وسلم وبارك على نبينا محمد

முஹம்மத் பின் ஸுலைமான் பின் அப்துல்லாஹ் அல்முஹன்னா

ரியாத் நகர்,

00966505490525

ஹதீஸ் : 1

عَنْ أبي عبد الرحمن عَبْدِ اللَّهِ بْنِ عُمَرَ بْنِ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُمَا قَالَ: سَمِعْتُ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُولُ: «بُنِيَ الْإِسْلَامُ عَلَى خَمْسٍ: شَهَادَةِ أَنْ لَا إِلَهَ إِلَّا اللَّهُ، وَأَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ، وَإِقَامِ الصَّلَاةِ، وَإِيتَاءِ الزَّكَاةِ، وَحَجِّ الْبَيْتِ، وَصَوْمِ رَمَضَانَ»، رَوَاهُ الْبُخَارِيُّ وَمُسْلِمٌ

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். **“இஸ்லாம் ஐந்து தூண்களின் மீது நிறுவப்பட்டுள்ளது. (அவை) அல்லாஹ்வைத் தவிர வேறு கடவுள் இல்லையெனவும், முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் அடியார் மற்றும் தூதர் எனவும் சாட்சி சொல்லல், தொழுகையை நிலைநாட்டல், ஸகாத்தைக் கொடுத்தல், ஹஜ் செய்தல். ரமழானில் நோன்பு நோற்றல்”** (ஆதாரம் : புகாரி, முஸ்லிம்)

விளக்கம் : இந்த ஹதீஸில் நபி (ஸல்) அவர்கள், இஸ்லாத்தில் மிகமுக்கியமான, கடமையான ஐந்து அம்சங்கள் உள்ளதாகக் குறிப்பிடுகின்றார்கள். இந்த விடயங்கள் **“அர்காநுல் இஸ்லாம்”** எனப்படும்.

முதல் கடமை : அல்லாஹ்வைத் தவிர வேறு கடவுள் இல்லையெனவும், முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் எனவும் சாட்சி சொல்லல். இந்தக் கடமையே மிகப் பிரதானமான கடமையாகும். யார் **“அல்லாஹ்வைத் தவிர வேறு கடவுள் இல்லை, முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர்”** என நாவால் கூறி, உள்ளத்தால் அதை ஏற்றுக்கொண்டால் அவர் இஸ்லாத்தில் நுழைந்துவிட்டார்.

இரண்டாம் கடமை : தொழுகையை நிலைநாட்டல். ஷஹாதா கலிமாவுக்குப் பின்னர், இஸ்லாத்தின் மிக முக்கிய கடமை

தொழுகையே. அதனாலேயே நபி (ஸல்) அவர்கள் ஷஹாதாவுடன் சேர்த்தே கூறினார்கள்.

மூன்றாம் கடமை : ஸகாத். ஸகாத் என்பது சொத்துக்களிலிருந்து ஷரீஆ நிர்ணயித்துள்ள ஓர் அளவாகும். ஒரு முஸ்லிம் அதனை ஏழை, எளியோர் போன்ற தகுதியானவர்களுக்கு கொடுத்திடவேண்டும்.

நான்காம் கடமை : ரமழான் மாதத்தில் நோன்பு நோற்பது. ஒரு முஸ்லிம் ரமழான் மாதம் முழுவதும் நோன்பு நோற்பது கடமையாகும். எனினும் நியாயமான காரணங்கள் உடையவராக இருந்தால் விடலாம்.

ஐந்தாம் கடமை : அல்லாஹ்வின் க.ஃ.பாவை ஹஜ் செய்தல். இது அதற்கான சக்தி பெற்ற ஒரு மனிதன் தனது வாழ்நாளில் ஒரு தடவை செய்யவேண்டிய கடமையாகும்.

இவையே இஸ்லாம் நிறுவப்பட்டுள்ள பிரதானமான தூண்களாகும். இவற்றின் விரிவான சட்டங்கள், ஒழுக்கங்கள் அகீதா மற்றும் பிக்ஹ் நூல்களில் கூறப்படும்.

ஹதீஸ் : ௨

عَنْ أَنَسٍ رَضِيَ اللَّهُ عَنْهُ، قَالَ: سُئِلَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ عَنِ الكَبَائِرِ، قَالَ: «الإِشْرَاكُ بِاللَّهِ، وَعُقُوقُ الوَالِدَيْنِ، وَقَتْلُ النَّفْسِ، وَشَهَادَةُ الزُّورِ» رواه البخاري ومسلم

அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : நபி (ஸல்) அவர்களிடம் பெரும்பாவங்கள் பற்றி வினவப்பட்ட போது, **"அல்லாஹ்வுக்கு இணைவைப்பதும், பெற்றோரை நோவினை செய்வதும், ஓர் உயிரைக் கொலை செய்வதும், பொய்சாட்சி சொல்வதுமாகும்"** என்றார்கள். (ஆதாரம் : புகாரி, முஸ்லிம்)

விளக்கம் : இந்த ஹதீஸில் நபி (ஸல்) அவர்கள் மிகக் கொடிய பெரும்பாவங்கள் நான்கைப் பற்றிக் கூறுகின்றார்கள்.

இந்த ஹதீஸில் நபியவர்கள் கூறிய பெரும்பாவங்கள் நான்காகும்.

1. **அல்லாஹ்வுக்கு இணைவைத்தல்.** ஏனெனில், இணைவைப்பு ஒரு மனிதனை இஸ்லாத்திலிருந்து வெளியேற்றி, இறைநிராகரிப்பில் நுழைத்துவிடுகின்றது. மேலும், அவன் நரகில் நிரந்தரமாக இருக்கவும் அது காரணியாகின்றது. அல்லாஹ் தஆலா கூறுகின்றான். **"நிச்சயமாக யார் அல்லாஹ்வுக்கு இணைவைக்கின்றாரோ. அவருக்கு அல்லாஹ் சுவனத்தை ஹராமாக்கிவிடுவான். அவனது தங்குமிடம் நரகம் தான். மேலும், அநியாயக்காரார்களுக்கு உதவிசெய்யும் யாருமில்லை."** (அல் மாஇதா : 72)
2. **பெற்றோரை நோவினை செய்தல்.** அதனுள், அவர்களை விரோதித்தல், சொற்கள், செயல்களால் அவர்களை

நோவினை செய்தல், அவர்களுக்குக் கட்டுப்படாமலிருத்தல், பல்வேறுபட்ட விதங்களில் அவர்களுக்கு தீங்கு செய்தல் போன்றவையும் அடங்கும்

3. **ஓர் உயிரைக் கொலைசெய்தல்.** கொலை மிகப் பெரும் பாவமாகும். அல்லாஹ்வின் கோபத்திற்கும், நரகில் நுழைவதற்கும் அது காரணமாகவிடுகின்றது. அல்லாஹ் கூறுகின்றான், **“யார் ஒரு மு.்.மினை வேண்டுமென்றே கொலைசெய்கின்றாரோ, அவனது கூலி நரகமாகும். அதில் அவர் நிரந்தரமாக இருப்பார். அல்லாஹ் அவன் மீது கோபம் கொண்டு, அவனை சபித்து, அவனுக்கு கடுமையான வேதனையையும் ஏற்படுத்தி வைப்பான்.”** (ஸூரா அந்நியா : 93)
4. **பொய் சாட்சி.** இங்கு “ஸூர்” எனப்படுவது பொய் என்பதாகும். யார் ஒருவனுக்கெதிராக பொய்யான சாட்சியைக் கூறுகின்றாரோ, அவர் மிகக் கெட்டவார்த்தையைப் பேசிவிட்டார். மேலும், மிகப் பெரிய ஒரு பாவத்தையும் செய்துவிட்டார்.

ஒரு முஸ்லிமின் கடமை என்னவெனில், அனைத்துவிடயங்களிலும் உண்மையாக இருப்பதே. சாட்சியம் வழங்கும் போது உண்மையாக நடந்துகொள்வதும் அதனுள் உள்ளடங்கும். எனவே, அவரிடம் நீதிமன்றங்களிலோ, ஏனையவற்றிலோ எதாவது ஒன்றிற்கு சாட்சியம் வழங்குமாறு வேண்டப்பட்டால், உண்மையையும், யதார்த்தத்தையும் கொண்டே சாட்சி சொல்லட்டும். பெரும்பாவத்தில் போய் விழாமலிருக்க பொய்யைத் தவிர்க்கட்டும்.

ஹதீஸ் – 3

عَنْ عَبْدِ اللَّهِ بْنِ عَمْرٍو رَضِيَ اللَّهُ عَنْهُمَا، عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: «المُسْلِمُ مَنْ سَلِمَ المُسْلِمُونَ مِنْ لِسَانِهِ وَيَدِهِ (متفق عليه)

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் இப்னு அம்ர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். **“யாருடைய நாவையும், கையையும் விட்டு முஸ்லிம்கள் பாதுகாப்பாக இருக்கின்றாரோ அவரே உண்மையான முஸ்லிமாகும்.”** (ஆதாரம் : புகாரி, முஸ்லிம்)

விளக்கம் : ஒரு முஸ்லிம் சிலவேளை இஸ்லாத்தில் பலமாக இருக்கலாம், அல்லது பலவீனமாக இருக்கலாம். அதே போன்று, ஒரு மு.்.மின் அவனது ஈமானில் சிலவேளை பலமாக இருக்கலாம். அல்லது பலவீனமாக இருக்கலாம்.

இஸ்லாத்தில் பலமாகவும், பூரணமாகவும் இருக்கும் முஸ்லிமே உண்மையான முஸ்லிமாகும். அவனது இஸ்லாமே அல்லாஹ் விரும்புகின்ற, பொருந்திக்கொள்கின்ற உண்மையான இஸ்லாமாகும்.

இந்த ஹதீஸில் நபி (ஸல்) அவர்கள், உண்மையான முஸ்லிம் என்பவன், தனதும் நாவையும், கையையும் பாதுகாத்துக்கொள்பவனே என்கிறார்கள். எனவே, அவன் தனது நாவினாலோ, கரத்தினாலோ முஸ்லிம்களுக்குத் தொந்தரவு செய்யமாட்டான். அவன் அவர்களை ஏசவோ, அவர்களைப் பற்றிப் புறம் பேசவோ, தனது நாவினால் தொந்தரவுசெய்யவோ, அடிக்கவோ மாட்டான். மேலும், அவர்களுக்கு தீங்கு செய்யவோ, தன் கரத்தால் அவர்கள் மீது அத்துமீறவோ மாட்டான்.

இஸ்லாத்தின் பூரணத்துவத்தை அடைந்துகொண்டவனின் பண்புகளே இவை. அதாவது முஸ்லிம்கள் அவனது கரத்தின், நாவின் தீங்குகளை விட்டும் பாதுகாப்பாக இருப்பார்கள்.

யார் தனது நாவினாலோ, கரத்தினாலோ முஸ்லிம்களுக்கு தொந்தரவு செய்கின்றாரோ, அவர் இஸ்லாத்திலும், ஈமானிலும் பலவீனமாவனர். அல்லாஹ்விடத்தில் பொருந்திக்கொள்ளப்படாதவர்.

ஹதீஸ் : 4

عَنْ أَبِي هُرَيْرَةَ، عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: " آيَةُ المُنَافِقِ ثَلاَثٌ: إِذَا حَدَّثَ كَذَبَ، وَإِذَا وَعَدَ أَخْلَفَ، وَإِذَا اؤْتُمِنَ خَانَ (متفق عليه)

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் **"நயவஞ்சகனின் அடையாளங்கள் மூன்றாகும். அவன் பேசினால் பொய்யுரைப்பான், வாக்களித்தால் மாறுசெய்வான், நம்பிக்கை வைக்கப்பட்டால் துரோகம் செய்வான்"** (ஆதாரம் : புகாரி, முஸ்லிம்)

விளக்கம் : நயவஞ்சகர்கள் அல்லாஹ்வின் படைப்புக்களில் ஒரு கெட்ட பிரிவினர். மறுமையில் அவர்களது நிலை எவ்வாறு இருக்கும் என்பதை அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான், **"நிச்சயமாக நயவஞ்சகர்கள் நரகின் மிக அடித்தட்டில் இருப்பார்கள்"** (ஸூரா அந்நிஸா : 145)

இந்த ஹதீஸில் நபி (ஸல்) அவர்கள் நாம் எச்சரிக்கையாக இருப்பதற்கும், தவிர்ந்துகொள்வதற்குமாக நயவஞ்சகர்களின் அடையாளங்களில் மூன்று அடையாளங்களைக் குறிப்பிட்டுள்ளார்கள்.

1. பொய் பேசுதல்.
2. வாக்குக்கு மாறுசெய்தல்.
3. நம்பிக்கைக்குத் துரோகம் செய்தல்.

இந்த மூன்று பண்புகளும் நயவஞ்சகர்களின் பண்புகளாகும்.

ஒரு முஃமினைப் பொறுத்தவரை, அவன் பேசினால் உண்மையே பேசுவான். பொய்யுரைக்கமாட்டான். யாருக்காவது ஏதும் வாக்களித்தால் அதற்கு மாறுசெய்யமாட்டான். மாறாக, அதை நிறைவேற்றுவான். யாராவது அவனிடம் ஏதும் ஒன்றை

அமானிதமாகக் கொடுத்தால், தாமதமோ, தடுமாற்றமோ, இழுத்தடிப்போ இன்றி அதைக் கொடுத்துவிடுவான்.

அதேபோன்று, யாராவது அவனிடம் ஒரு செய்தியை, அல்லது ஓர் இரகசியத்தைக் கூறி, அதனை மறைத்துக்கொள்ளுமாறு வேண்டினால், அதை மறைத்துக்கொள்வார். யாரிடமும் கூறமாட்டார். ஏனெனில் இரகசியத்தை வெளியிடுவது துரோகத்தின் ஒரு வகையே. அல்லாஹ் எங்களை அதனை விட்டும் பாதுகாப்பபானாக.

ஹதீஸ் – 5

عن جابر رضي الله عنه قال : سمعت النبي صلى الله عليه وسلم يقول : إِنَّ بَيْنَ الرَّجُلِ وَبَيْنَ الشِّرْكِ وَالْكُفْرِ تَرْكَ الصَّلَاةِ (رواه مسلم)

நபி (ஸல்) அவர்கள் கூறியதை தான் செவிமடுத்ததாக ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். **“ஒரு மனிதனுக்கும் இணைவைப்பு, நிராகரிப்புக்குமிடையில் வேறுபடுத்தும் அம்சம் தொழுகையை விடுவதாகும்.”** (ஆதாரம் : முஸ்லிம்)

விளக்கம் : அல்லாஹ்வைத் தவிர வேறு கடவுள் இல்லை என சாட்சி சொல்லல், முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என சாட்சி சொல்லல் என்ற இரண்டு “ஷஹாதாக்களுக்கும்” பின்னரான இஸ்லாத்தின் மிக முக்கிய கடமை தொழுகையாகும். அதனாலேயே அதை நிலைநாட்டுமாறு ஏவியும், அதை விடுவதைத் தடுத்தும் பல அல்குர்ஆனிய வசனங்களும் நபிமொழிகளும் வந்துள்ளன.

இந்த ஹதீஸ் தொழுகையில் பொடுபோக்காக இருப்பதன் அபாயத்தை எமக்கு உணர்த்துகின்றது. இதில் நபி (ஸல்) அவர்கள், தொழகையை விடுவதைத் தவிர மனதினுக்கும் இறைநிராகரிப்பு, இணைவைப்புக்கும் மத்தியில் எந்தவொன்றுமில்லை என்கின்றார்கள். ஏனெனில் அதை விடுவது இணைவைப்பு, இறைநிராகரிப்பில் கொண்டுபோய்ச் சேர்க்கும். அதை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுவோமாக.

இந்த ஹதீஸ், தொழுகையை விடுவது மோசமான பெரும்பாவம் என்பதற்கான ஓர் ஆதாரமாகும். மேலும் வட்டி, விபச்சாரம், திருட்டு போன்ற பெரும்பாவங்களை விடவும் இது

மிகக்கடுமையானது என்பதையும் உணர்த்துகின்றது. அதே நேரம் மேற்கூறியவையும் பெரும்பாவங்களே.

எனவே, முஸ்லிமான ஒவ்வொரு ஆணும், பெண்ணும் தொழுகையில் அதிகம் ஆர்வம் காட்டுவதும், கவனம் செலுத்துவது கட்டாயமாகும். அதை நிறைவேற்றுவது நலவுகளுக்கும், அபிவிருத்திக்கும், ரிஸ்குக்கும் காரணியாக உள்ளது. மேலும், பாவமன்னிப்பு, சுவனம், அல்லாஹ்வின் பொருத்தம் என்பவற்றிற்கும் ஒரு வழியாகும்.

ஹதீஸ் – 6

عن عَبْدِ اللَّهِ بن مسعود رضي الله عنه قَالَ: سَأَلْتُ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: أَيُّ العَمَلِ أَحَبُّ إِلَى اللَّهِ؟ قَالَ: "الصَّلاَةُ عَلَى وَقْتِهَا» قَالَ: ثُمَّ أَيٌّ؟ قَالَ: «بِرُّ الوَالِدَيْنِ" (متفق عليه)

அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்கள் அறிவிக்கன்றார்கள், **“நான் நபி (ஸல்) அவர்களிடம், அமல்களில் அல்லாஹ்வுக்கு மிகவிருப்பமானது எது? எனக் கேட்டேன். அதற்கவர்கள், “தொழுகையை அதன் நேரத்திற்கு நிறைவேற்றுவது” என்றார்கள். பின்பு எது? எனக் கேட்க, “பெற்றோருக்குப் பணிவிடை புரிவது”** என்றார்கள். (ஆதாரம் : புகாரி, முஸ்லிம்)

விளக்கம் : நபித்தோழர்கள் நபி (ஸல்) அவர்களிடம் அல்லாஹ் விரும்புகின்ற, பொருந்திக்கொள்கின்ற நல்லமல்களைப் பற்றிக் கேட்பவர்களாக இருந்தார்கள். அவற்றின் மூலம் அல்லாஹ்வை நெருங்குவதே அவர்களது நோக்கமாகும்.

இந்த ஹதீஸில் இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் தான் நபியவர்களிடம், அல்லாஹ் விரும்பும் நல்லமல்களைப் பற்றிக் கேட்டதாகக் கூறுகின்றார்கள். அதற்கு நபியவர்கள் அல்லாஹ்விடம் அதிகம் விருப்பமான, முக்கியமான வணக்கம் தொழுகையை அதன் நேரத்தில் (ஆரம்ப நேரத்தில்) தொழுவது என்றார்கள். ஏனெனில் தொழுகையை அதன் ஆரம்ப நேரத்தில் தொழுவது தொழுகையில் விருப்பமும், நேசமும் இருப்பதைக் காட்டுகின்றது. யார் அல்லாஹ்வை வணங்குவதை விரும்புகின்றாரோ அவரை அல்லாஹ் நேசிப்பான்.

எனவே, முஸ்லிமான ஆண், பெண்கள் தொழுகையில் அதிகம் ஆர்வம் காட்டுவது அவசியமாகும். ஆண்கள் பள்ளிவாசல்களில்

முஸ்லிம்களுடன் கூட்டாகத் தொழவேண்டும். பெண்கள் வீடுகளில் ஆரம்ப நேரத்திலேயே தொழுதுகொள்ளவேண்டும்.

கவனத்தில் கொள்ளப்படவேண்டிய ஒரு முக்கிய அம்சம் என்னவெனில், ஒவ்வொரு முஸ்லிமான ஆணும் பெண்ணும் தொழுகையின் நேரத்தை அறிந்திருப்பது அவசியமாகும். தொழுகை நேரம் என்பது மிக முக்கிய ஓர் அம்சமாகும். யார் வேண்டுமென்றே தொழுகையை அதன் நேரம் முடியும் வரை தொழாமல் இருக்கின்றாரோ, அவர் மிகமோசமான ஒரு பெரும்பாவத்தை செய்துவிட்டார்.

பின்பு நபி (ஸல்) அவர்கள் இந்த ஹதீஸில் அல்லாஹ் விரும்புகின்ற இன்னுமொரு அமலைக் கூறுகின்றார்கள். அதுதான் பெற்றோருக்கு பணிவிடை செய்வதாகும்.

பெற்றோருக்கு பணிவிடை செய்வதென்பது, முக்கியமான, மகத்துவமான, அல்லாஹ்வுக்கு மிகவிருப்பமான ஒரு வணக்கமாகும். அது, ஒரு பிள்ளை – ஆணாகவோ, பெண்ணாகவோ இருக்கலாம் - தனது வார்த்தைகள், செயல்கள் மூலம் தன் பெற்றோர்களுக்கு நலவு செய்வதாகும். அவர்களுக்கு வழிப்படுவது, அவர்களை கண்ணியப்படுத்துவது, அவர்களைக் கவனிப்பது. சொல்லாலோ, செயலாலோ அவர்களுக்கு தீங்கு விழைவிக்காமல் இருப்பது என்பன அதனுள் உள்ளடங்கும். மாறாக, மேற்கூறிய இச்செயல்களைச் செய்வது அவர்களை நோவிப்பதாகும். அது பெரும்பாவங்களில் ஒன்றாகும். அல்லாஹ்விடத்தில் நாம் பாதுகாப்பையும், மன்னிப்பையும் கேட்போம்.

ஹதீஸ் எண் : 07

عَنْ عُثْمَانَ بْنِ عَفَّانَ، قَالَ: سَمِعْتُ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُولُ: «مَنْ تَوَضَّأَ لِلصَّلَاةِ فَأَسْبَغَ الْوُضُوءَ، ثُمَّ مَشَى إِلَى الصَّلَاةِ الْمَكْتُوبَةِ، فَصَلَّاهَا مَعَ الْجَمَاعَةِ غَفَرَ اللهُ لَهُ ذُنُوبَهُ» (رواه مسلم)

நபி (ஸல்) அவர்கள் கூறியதை தான் செவிமடுத்ததாக உஸ்மான் பின் அப்பான் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், **“யார் வுழூவைப் பூரணமாகச் செய்து, பின்பு கடமையான தொழுகைக்காக நடந்து சென்று, ஜமாஅத்துடன் அதை நிறைவேற்றுகின்றாரோ, அவரது பாவங்களை அல்லாஹ் மன்னித்துவிடுவான்.”** (ஆதாரம் : முஸ்லிம்)

விளக்கம் : இந்த ஹதீஸில் நபி (ஸல்) அவர்கள் எமக்கு ஒரு மகத்தான அமலைப் பற்றிச் சொல்லித்தருகின்றார்கள். யார் அதைச் செய்கின்றாரோ, அவரை அல்லாஹ் சங்கையான ஒரு கூலியைக் கொண்டு கண்ணியப்படுத்துவான். அந்த சங்கையான கூலி என்னவெனில், அவன் அவரது பாவங்களை மன்னிப்பதாகும்.

இந்த அமல் தொழுகையுடன் தொடர்புபட்டது. மேலும் அது ஒரு முஸ்லிம் அல்லாஹ்வுக்காக செய்யும் 3 விடயங்களால் அமையப்பெற்றது.

1. வுழூவைப் பரிபூரணமாகச் செய்வது. அதாவது, வுழூவின் ஒவ்வொரு உறுப்புக்களுக்கும் உறுதியாக நீர் சென்றடையுமளவு பூரணமாகச் செய்வதாகும்.
2. கடமையாக்கப்பட்ட தொழுகையை நிறைவேற்றும் நோக்கில் பள்ளிவாசலுக்கு நடந்துசெல்லல்.
3. கடமையான அத்தொழுகையை முஸ்லிம்களுடன் கூட்டாகத் தொழல்.

எனவே, யார் பூரணமான வுழு செய்தல், பின்பு பள்ளிக்கு நடந்து செல்லல், ஜமாஅத்துடன் தொழுதல் ஆகிய மூன்று அம்சங்களையும் செய்கின்றாரோ, இந்த சங்கையான கூலியை அவர் அடைந்துகொள்வார். அதாவது அல்லாஹ் அவரது பாவங்களை மன்னித்துவிடுவான். யாருடைய பாவத்தை அல்லாஹ் மன்னித்து விடுகின்றானோ, அவர் இம்மையிலும் மறுமையிலும் வெற்றிபெற்றவர்.

ஹதீஸ் எண் : 08

عَنْ أَبِي هُرَيْرَةَ عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: "مَنْ كَذَبَ عَلَيَّ مُتَعَمِّدًا فَلْيَتَبَوَّأْ مَقْعَدَهُ مِنَ النَّارِ" (متفق عليه)

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், **“யார் வேண்டுமென்றே என்மீது பொய்யுரைக்கின்றாரோ, அவர் நரகத்தில் தனது ஒதுங்குமிடத்தை ஏற்படுத்திக்கொள்ளட்டும்”** (ஆதாரம் : புகாரி, முஸ்லிம்)

விளக்கம் : நபி (ஸல்) அவர்களது ஹதீஸ்கள் விடயத்தில் பொய்கூறுவது மிகமோசமான கொடிய பாவமாகும். யார் ஒரு பேச்சை உருவாக்கி, அது நபயிவர்களின் பேச்சென வாதிடுகின்றாரோ, அவர் ஒரு மிகமோசமான பாவத்தை செய்துவிட்டார்.

மேலும், நபி (ஸல்) அவர்கள் மீது இட்டுக்கட்டப்பட்ட ஒரு ஹதீஸை, அது இட்டுக்கட்டப்பட்டது எனத் தெளிவுபடுத்தாமல் அறிவிக்கின்றாரோ, அவர் அத்துமீறி அநீதி இழைத்துவிட்டார். மிகப்பெரிய தவறை செய்துவிட்டார்.

கவலைக்குரிய விடயம் என்னவெனில், மக்கள் மத்தியில் இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்கள் பரவியிருப்பதாகும்.

சில நல்ல மக்கள் நன்னோக்கத்தில் இவற்றைப் பரப்புவதும் கவலைக்குரிய ஒரு விடயமாகும். இது ஒரு பெரும் பாவமாகும். இதை நாம் எமக்கு மத்தியில் எச்சரிக்கை செய்துகொள்வது அவசியமாகும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், **“நிச்சயமான என் மீது பொய்யுரைப்பது ஏனையோரின் மீது பொய்யுரைப்பதைப் போல**

அல்ல. யார் வேண்டுமென்றே என்மீது பொய்யுரைக்கின்றாரோ, அவர் நரகத்தில் தனது ஒதுங்குமிடத்தை ஏற்படுத்திக்கொள்ளட்டும்'' (ஆதாரம் : புகாரி)

மேலும் கூறினார்கள், **"ஒரு மனிதர், பொய்யாக இருக்கலாம் எனத் தான் கருதும் ஒரு செய்தியை என்னைத் தொட்டும் அறிவிக்கின்றாரோ, அவர் பொய்யர்களில் ஒருவராவார்.''** (ஆதாரம் : திர்மிதி)

எனவே, எமது கடமை என்னவெனில், ஹதீஸ்களை நபியவர்கள் கூறியதாகக் கூறமுன் அது ஆதாரபூர்வமானதா? என்பதை உறுதிசெய்துகொள்வதாகும்.

மேலும், அல்லாஹ் எமக்குச் செய்த பெரும் அருள்களில் ஒன்று, தற்காலத்தில் ஹதீஸ்களின் உண்மைத்தன்மையை அறியும் வழியை இலகுபடுத்தியுள்ளதாகும். நம்பிக்கையான இணையதளங்கள், நூல்கள் மூலமாக அவற்றை நாம் அறிந்துகொள்ளலாம்.

இமாம் அல்பானியின் நூல்கள் இத்துறையில் பிரபலமானவையாகும்.

அத்துரருஸ் ஸனிய்யா இணையதளத்தின், "அல்மவ்ஸூஅதுல் ஹதீஸிய்யா" வும் இத்துறையில் பிரபலமான ஒரு இணைய பக்கமாகும்.

ஹதீஸ் எண் : 09

عَنْ عَبْدِ اللهِ بْنِ مَسْعُودٍ، عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: "لَا يَدْخُلُ الْجَنَّةَ مَنْ كَانَ فِي قَلْبِهِ مِثْقَالُ ذَرَّةٍ مِنْ كِبْرٍ" (رواه مسلم)

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், **“யாருடைய உள்ளத்தில் அணுவளவாவது பெருமை உள்ளதோ அவர் சுவனம் நுழையமாட்டார்.”** (ஆதாரம் : முஸ்லிம்)

விளக்கம் : இஸ்லாமிய மார்க்கம் நற்குணங்களின், சங்கையான பண்புகளின் மார்க்கம். இதனாலேயே, மென்மை, பணிவு, பரிவு என்பவற்றை அது ஏவுகின்றது. பெருமிதம், பெருமை, அகம்பாவம் என்பவற்றை அது எதிர்க்கின்றது.

இந்த ஹதீஸில் நபி (ஸல்) அவர்கள் மக்களை அற்பமாகக் கருதி, அவர்கள் மீது அடாந்தேறும் பெருமைக்காரார்களை எச்சரிக்கின்றார்கள். ஏனெனில் பெருமையடிப்பவர்கள் சுவனம் நுழையமாட்டார்கள். நாம் அல்லாஹ்விடம் ஈடேற்றத்தையும், பாதுகாப்பையும் கேட்போம்.

“யாருடைய உள்ளத்தில் அணுவளவும் பெருமை உள்ளதோ அவர் சுவனம் நுழையமாட்டார்.” என்ற நபியவர்களது வார்த்தையின் அர்த்தம் என்னவெனில், பெருமையென்பது பயங்கரமான ஓர் அம்சம். அது அணுவளவாக இருப்பினும் சரியே. அணுவளவு என்பது மிகக்குறைந்த ஓர் அளவே.

பெருமை என்றால் என்னவென்பதையும் நபியவர்கள் எமக்குக் கற்றுத் தந்துள்ளார்கள். நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள், **“பெருமை என்பது உண்மையை மறைப்பதும் மக்களை அற்பமாகக் கருதுவதுமாகும்”** உண்மையை மறைப்பதென்றால்,

அதை ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதாகும். மக்களை அற்பமாகக் கருதுவது என்பது அவர்களை இழிவாகப் பார்ப்பதாகும்.

பெருமையைக் கண்டிக்கும் இன்னுமொரு ஹதீஸையும் நாம் காணலாம். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், **“யார் தற்பெருமை கொள்கின்றாரோ, அல்லது தனது நடையில் அகம்பாவத்தைக் காட்டுகின்றாரோ, அல்லாஹ்வை அவர் சந்திக்கும் போது அவருடன் அல்லாஹ் கோபத்தில் இருப்பான்”** (ஆதாரம் : அல்அதபுல் முப்ரத்)

எனவே, பெருமை ஒரு பெரும்பாவம், மேலும் ஒரு கெட்டகுணம் என்பதை நாம் அறிந்துகொண்டால், அதைத் தவிர்ப்பது கட்டாயமாகும். அதைவிட்டும் தூரமாக்கும் நல்ல செயல்களை செய்வது அவசியமாகும். உதாரணமாக, உபதேசத்தை ஏற்றுக்கொள்ளல், உண்மைக்கு வழிப்படல், ஏழைகள், பலவீனர்கள், தேவையுள்ளோர், பணியாட்கள் போன்றோரை நேசித்தல், அவர்களுடன் அன்பாக நடத்தல், அவர்கள் விடயத்தில் கவனம் செலுத்துதல், அவர்களுடன் தாழ்வாக நடத்தல். இவையனைத்தும் உள்ளத்தைத் தூய்மைப்படுத்தி, தற்பெருமை, அகம்பாவம், பெருமிதம் என்பவற்றை விட்டும் அதனைப் பாதுகாக்கும் அம்சங்களாகும்.

ஹதீஸ் எண் : 10

عَنْ عُثْمَانَ رَضِيَ اللَّهُ عَنْهُ، عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: "خَيْرُكُمْ مَنْ تَعَلَّمَ الْقُرْآنَ وَعَلَّمَه" (رواه البخاري)

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக **உஸ்மாக் பின் அப்பான் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், "உங்களில் சிறந்தவர் அல்குர்ஆனைத் தானும் கற்று, பிறருக்கும் கற்றுக்கொடுப்பவராவார்"** (ஆதாரம் : புகாரி)

விளக்கம் : இந்த ஹதீஸ் அல்குர்ஆனைக் கற்பதனதும், கற்றுக்கொடுப்பதனதும் முக்கியத்துவத்தை விளக்குகின்றது. அல்குர்ஆனைக் கற்று, அதைக் கற்றுக்கொடுப்பவர்களே மக்களில் சிறந்தவர்கள், மேன்மையானவர்கள் என நபியவர்கள் எமக்குக் கூறுகின்றார்கள்.

உஸ்மான் (ரலி) அவர்களிடமிருந்து இந்த ஹதீஸை அறிவிக்கும் தாபிஈ அபூ அப்துர்ரஹ்மான் அஸ்ஸுலமீ அவர்கள் இதை அறிவிக்கும் போது, "இதுவே என்னை இந்த இடத்தில் உட்காரச் செய்தது" எனக் கூறுகின்றார்கள், அதாவது, அந்தத் தாபிஈ இந்த ஹதீஸில் சொல்லப்பட்டுள்ள சிறப்பை அடைந்துகொள்ளும் ஆர்வத்தில், பலவருடங்களாக அல்குர்ஆனைக் கற்றுக்கொடுத்துக் கொண்டிருந்தார்.

எனவே அதனடிப்படையில், முஸ்லிமான ஒவ்வொரு ஆணும் பெண்ணும் அல்குர்ஆன் விடயத்தில் கவனம் செலுத்துவதும், அதை அழகான முறையில் நேர்த்தியாக ஓதக் கற்றுக்கொள்வதும், கட்டாயமாகும். பின்பு, ஏனையோருக்கு அதைக் கற்பிப்பதில் ஈடுபடுவார்.

பள்ளிவாசல்கள், பாடசாலைகளில் இருக்கும் அல்குர்ஆன் மனன வகுப்புகளில் அல்குர்ஆனைக் கற்பதற்காகக்

கலந்துகொள்வது பயனுள்ள, அழகான ஓர் அம்சமாகும். யார் அதைச் செய்கின்றாரோ, அவர் நன்மையிலும், நேர்வழியிலும், பிரகாசத்திலுமுள்ளார்.

ஹதீஸ் எண் : 11

عَنْ أَبِي هُرَيْرَةَ، عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: "كَلِمَتَانِ خَفِيفَتَانِ عَلَى اللِّسَانِ، ثَقِيلَتَانِ فِي المِيزَانِ، حَبِيبَتَانِ إِلَى الرَّحْمَنِ: سُبْحَانَ اللَّهِ العَظِيمِ، سُبْحَانَ اللَّهِ وَبِحَمْدِهِ" (متفق عليه)

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக, அபூ ஹுைரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், **“இரண்டு வார்த்தைகள் உள்ளன. அவை நாவுக்கு இலகுவானவை, மீஸான் தராசில் கனமாகுபவை, அல்லாஹ்விடத்தில் விருப்பமானவை. (அவை) ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹீ, ஸுப்ஹானல்லாஹில் அழீம் என்பனவாகும்”** (ஆதாரம் : புகாரி, முஸ்லிம்)

விளக்கம் : அதிகம் திக்ர் செய்யுமாறு நபியவர்கள் எங்களைத் தூண்டியுள்ளார்கள். அதன் முக்கியத்துவத்தையும், சிறப்பையும் தெளிவுபடுத்தியுமுள்ளார்கள். காலை, மாலை நேரங்களுக்கும், தூங்கும் போதும், தூங்கி எழும்பும் போதும் ஓதும் அத்கார்களை நபியவர்கள் எமக்குக் கற்றுத் தந்துள்ளார்கள். இவையனைத்தும் அத்கார்களுக்குரிய நூல்களில் கூறப்பட்டுள்ளன. உதாரணமாக, இமாம் நவவியின் **“அல்அத்கார்”**, ஷேய்க் பின் பாஸ் அவர்களின் **“துஹ்பதுல் அக்யார்”**, ஷேய்க் ஸ.்.த் அல்கஹ்தானியின் **“ஹிஸ்னுல் முஸ்லிம்”**. வேறுபல நூல்களும் உள்ளன.

மேலும், எண்ணிக்கையோ, நேரமோ குறிப்பிடப்படாமல், பொதுவாக அனைத்து நேரங்களிலும் கூறுவது விரும்பத்தக்க பொதுவான அத்கார்களும் உள்ளன. அவற்றில் :

سبحان الله والحمد لله ولا إله إلا الله والله أكبر، ولا حول ولا قوة إلا بالله

(ஸுப்ஹானல்லாஹி வல்ஹம்து லில்லாஹி வலாஇலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர். வலா ஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹ்)

என்ற திக்ரும் அடங்கும்.

மேலும், ஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹீ, ஸுப்ஹானல்லாஹில் அழீம் (سبحان الله وبحمده، سبحان الله العظيم) என்ற மகத்துவமிக்க இரண்ட கலிமாக்களும் அவற்றுள் அடங்கும். இந்த இரண்டு வார்த்தைகளுக்கும் 3 சிறப்பம்சங்கள் இருப்பதாக நபியவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்,

1. அவ்விரண்டும் நாவுக்கு இலகுவானவை. எந்தவொரு கஷ்டமுமின்றி ஒரு மனிதனால் அவற்றைக் கூறிக்கொண்டிருக்கமுடியும்.
2. மீஸான் தராசில் அவ்விரண்டும் கனமானவை. அதாவது, யார் இவ்விரு கலிமாக்களையும் கூறுகின்றாரோ, அவருக்கு அதிகமான கூலி உண்டு. அல்லாஹ் அதன் மூலம் அவருடைய நன்மையின் தட்டை நிரப்பிவிடுவான்.
3. அவ்விரண்டும் அல்லாஹ்வுக்கு விருப்பமானவை. அதாவது, அல்லாஹ் தஆலா அவ்விரண்டையும் விரும்புகின்றான். இவ்விரண்டு கலிமாக்களும் மிக முக்கியமானவை என்பதையே அது உணர்த்துகின்றது.

இதன் காரணமாக, இவ்விரண்டு கலிமாக்களையும், மற்றும் ஏனைய பொதுவான அத்கார்களையும் நாம் கவனித்து ஓதுவது அவசியமாகும். மேலும் அல்லாஹ்விடமிருந்து அதிக கூலியைப் பெற்றுக்கொள்வதற்காக, எல்லா நேரங்களிலும், நிலைமைகளிலும் அவற்றை அதிகம் ஓதுவதில் ஆர்வம் காட்டுவதும் அவசியமாகும்.

ஹதீஸ் எண் : ௧௨

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللَّهُ عَنْهُ، قَالَ: أَوْصَانِي خَلِيلِي صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ بِثَلَاثٍ: «صِيَامِ ثَلَاثَةِ أَيَّامٍ مِنْ كُلِّ شَهْرٍ، وَرَكْعَتَيِ الضُّحَى، وَأَنْ أُوتِرَ قَبْلَ أَنْ أَنَامَ» (متفق عليه)

அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், **“எனது நேசர் முஹம்மத் (ஸல்) அவர்கள் எனக்கு மூன்று விடயங்களை உபதேசித்தார்கள். ஒவ்வொரு மாதமும் மூன்று நாட்கள் நோன்பு நோற்பது, இரண்டு ரக்அத்கள் ழுஹா தொழுவது, தூங்கமுன் வித்ர் தொழுவது”** (ஆதாரம் : புகாரி, முஸ்லிம்)

விளக்கம் : அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் நபியவர்களுக்கு நெருக்கமான, கண்ணியமான ஒரு நபித்தோழராவார்.

நபியவர்கள் தனக்கு செய்த உபதேசத்தை அவர்கள் எமக்கு சொல்லித்தருகின்றார்கள். “என்னுடைய நேசர் எனக்கு உபதேசித்தார்” இங்கு நேசன் என்பதற்கு “கலீல்”என்கிறார்கள். இது “ஹபீப்” (நேசன்) என்ற அர்த்தத்தைத் தந்தாலும், ஹபீப் என்பதை விட நெருக்கத்தைக் காட்டும் ஒரு வார்த்தையாகும்.

அவர் கூறுகின்றார், “எனது நேசர் எனக்கு மூன்று விடயங்களை உபதேசித்தார்கள்.”

முதல் உபதேசம் : ஒவ்வொரு மாதமும் 3 நாட்கள் நோன்பு நோற்றல். இது மகத்தான சிறப்புகளை உடைய, முக்கியமான ஒரு ஸுன்னாவாகும். ஒவ்வொரு மாதமும் மூன்று நாட்கள் நோன்பு நோற்பது வருடம் முழுதும் நோன்பு நோற்பதைப் போலவாகும் என நபியவர்கள் எமக்கு அறிவித்துத்

தந்துள்ளார்கள். இது அல்லாஹ் தன் அடியார்களுக்கு வழங்கியுள்ள விஷேட பாக்கியங்களில் ஒன்றாகும்.

இங்கு நாடப்படுவது உபரியான நோன்புகளே. அதாவது ஒரு மனிதன் ஒவ்வொரு மாதமும் தொடராகவோ, விட்டுவிட்டோ மூன்று நாட்கள் நோன்பு நோற்பதாகும்.

இரண்டாம் உபதேசம் : ழுஹாத் தொழகையாகும். அதாவது ழுஹா நேரத்தில் (காலைநேரத்தின் நடுப்பகுதியில்) இரண்டு அல்லது அதிகமாக ரக்அத்கள் தொழுவதாகும். ழுஹாவுடைய நேரத்தில் இரண்டோ, நான்கோ அல்லது அதற்கு அதிகமாகவோ ஒரு முஸ்லிம் தொழுவது விரும்பத்தக்கதாகும். அதற்கான கூலியும், சிறப்பும் மகத்தானது.

மூன்றாம் உபதேசம் : வித்ர் தொழுகை. உபரியான தொழுகைகளில் சிறந்தது வித்ர் ஆகும். இஷா தொழுததிலிருந்து ஸுப்ஹ் பாங்கு வரை அதன் நேரம் உள்ளது. அதாவது, ஒரு முஸ்லிம் அல்லாஹ்வுக்காக உபரியாக ஒரு ரக்அத்தோ, மூன்றோ, ஐந்தோ, அல்லது அதைவிட அதிகமாகவோ தொழுவதாகும். அதன் எண்ணிக்கை ஒற்றைப்படையாக இருப்பது முக்கியமாகும் “வித்ர்”என்ற சொல்லின் அர்த்தமும் அதுவே.

இது நபியவர்கள் அபூ ஹுரைரா (ரல்) அவர்களுக்குச் செய்த உபதேசமாகும். எங்கள் நேசர், எங்கள் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களிடமிருந்து இது எங்களுக்கும் ஓர் உபதேசமாகும்.

ஹதீஸ் எண் : 13

عَنْ أَبِي هُرَيْرَةَ أَنَّ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: "أَقْرَبُ مَا يَكُونُ الْعَبْدُ مِنْ رَبِّهِ، وَهُوَ سَاجِدٌ، فَأَكْثِرُوا الدُّعَاءَ" (متفق عليه)

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், **“ஒரு அடியான அல்லாஹ்வுக்கு மிக் நெருக்கமாக இருப்பது அவன் ஸுஜூதில் இருக்கும் போதாகும். எனவே, (அதில்) அதிகம் துஆக் கேளுங்கள்.”** (ஆதாரம் : முஸ்லிம்)

விளக்கம் : அல்லாஹ் தன் அடியார்களுக்கு தன்னை பலதரப்பட்ட வணக்கங்கள் மூலமாக நெருங்கிக்கொள்ளுமாறு ஏவியுள்ளான்.

அல்லாஹ்வின் பால் நெருக்கமாக்கும் முக்கிய ஒரு வணக்கம் கடமையான, உபரியான தொழுகைகளாகும். ஒரு முஸ்லிம் தொழுகையில் நுழைந்துவிட்டால் அவன் அல்லாஹ்வை நெருங்கியவனாக ஆகிவிடுவான்.

தொழுகை முழுவதும் அல்லாஹ்விடம் நெருக்கமாக்கும் ஒன்றாக இருக்கும் அதேவேளை, ஸுஜூதில் இருக்கும் போது ஒரு மனிதன் அதிகம் நெருக்கமாக இருப்பான். ஏனெனில், ஒரு அடியான் தனது ஸுஜூதில் அல்லாஹ்வுக்காக தாழ்வடைகின்றான். அவனைத் துதிக்கின்றான், தூய்மைப்படுத்துகின்றான். தாழ்மையுடனும், தேவையுடனும் உள்ளச்சத்துடனும் அவனை அழைக்கின்றான்.

அதனால்தான், ஸுஜூத் துஆ ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு இடமாக உள்ளது. முஸ்லிம் கிரந்தத்தில் பதிவாகியுள்ள பிறிதொரு ஹதீஸில் நபியவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்.

‘ஸுஜூதில் அதிகம் முயற்சித்து துஆக் கேளுங்கள். உங்களுக்கு பதிலளிக்கப்பட அதிகம் வாய்ப்புள்ளது’

அதன் காரணமாகவே, ஒரு மனிதன் ஸுஜூதை நீட்டி, அதிகம் துஆக் கேட்பது விரும்பத்தக்கதாகும். ஏனெனில் ஸுஜூதும் துஆவும் இம்மை மறுமையின் நலவு மற்றும் வெற்றிக்கான ஒரு முக்கிய காரணியாகும்.

ஹதீஸ் எண் : 14

عَنْ ثَابِتِ بْنِ الضَّحَّاكِ، عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: "لَعْنُ الْمُؤْمِنِ كَقَتْلِهِ" (رواه مسلم)

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக, ஸாபித் பின் அழ்ழஹ்ஹாக் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், **'ஒரு மு.்.மினை சபிப்பது அவனைக் கொல்வதைப் போலவாகும்'** (ஆதாரம் : புகாரி, முஸ்லிம்)

விளக்கம் : சபித்தல் என்பது மோசமான ஒரு பெரும்பாவமாகும்.

நபி (ஸல்) அவர்கள் பல ஹதீஸ்களில் எமக்கு அதை எச்சரித்துத் தடுத்துள்ளார்கள். இந்த ஹதீஸும் அவற்றில் ஒன்றாகும். அதாவது நபியவர்கள், 'ஒரு மு.்.மினை சபிப்பது அவனைக் கொல்வதைப் போல' என்கின்றார்கள்.

இன்னுமொரு ஹதீஸில் நபியவர்கள், **'அல்லாஹ்வுடைய சாபத்தைக் கொண்டோ, கோபத்தைக் கொண்டோ சபித்துக் கொள்ளாதீர்கள்.'** என்றார்கள். (ஆதாரம் : திர்மிதி)

இன்னுமொரு ஹதீஸில் நபியவர்கள், **'நியாயமின்றி ஒரு மனிதர் ஒன்றைச் சபித்தால், அச்சாபம் அவரை நோக்கியே திரும்பும்'** என எமக்குக் கூறியுள்ளார்கள். (ஆதாரம் : அபூ தாவூத்) அதாவது, அச்சாபம் அவருக்கே திரும்பி வந்துவிடும்.

ஸலமா இப்னுல் அக்வ.். (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். **'ஒரு மனிதர் தனது ஒரு சகோதரனை சபிப்பதை நாம் கண்டால் அவர் ஒரு பெரும் பாவம் செய்துவிட்டதாக நாம் பார்ப்போம்.'** (ஆதாரம் : தபரானி)

ஷேய்க் பின் பாஸ் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள், **‘ஒரு முஸ்லிமை சபிப்பது பெரும்பாவங்களில் ஒன்றாகும்’**

முஸ்லிம்களில் பலரிடத்தில் இந்த சபிக்கும் பண்பு பரவியிருப்பது கவலைக்குரிய அம்சமாகும். அல்லாஹ்வே போதுமானவன்.

எமது கடமை என்னவெனில், அதைக் கண்டிப்பதும், அதைவிட்டும் எச்சரிக்கையாக இருப்பதும் கடுமையாக அதை விட்டும் மக்களை எச்சரிப்பதுமாகும்

ஹதீஸ் எண் : 18

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللَّهُ عَنْهُ: أَنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: " قَالَ اللَّهُ عَزَّ وَجَلَّ: أَنْفِقْ أُنْفِقْ عَلَيْكَ" (متفق عليه)

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், **"அல்லாஹ் கூறுகின்றான், "ஆதமுடைய மகனே! நீ செலவழி! நான் உனக்கு செலவழிப்பேன்"** (ஆதாரம் : புகாரி, முஸ்லிம்)

விளக்கம் : அல்லாஹ் தனது முஃமினான அடியார்களை புகழ்ந்துரைத்த முக்கிய ஒரு பண்பு அல்லாஹ்வின் பாதையில் செலவழிப்பதாகும். அதைப் பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான், **"அலிப் லாம் மீம். இந்த வேதத்தில் எந்த சந்தேகமும் இல்லை. (இது) பயபக்தியுள்ளோருக்கு நேர்வழியாகும். அவர்கள் மறைவானதை நம்பிக்கைக் கொண்டு, தொழுகையை நிலைநாட்டி, நாம் அவர்களுக்குக் கொடுத்ததில் இருந்து செலவழிப்பார்கள்."** (அல்பகரா : 1-3)

செலவழித்தல் பல விடயங்களை உள்ளடக்குகின்றது. ஒரு மனிதன் தன் மனைவி பிள்ளைகளுக்கு செலவழிப்பது, ஏழை எளியோருக்கு செலவழிப்பது, அல்குர்ஆன் அச்சிடல், பயனுள்ள புத்தகங்களை விநியோகித்தல், நோயாளிகளுக்க சிகிச்சை செய்தல் போன்ற நலன்பரித் திட்டங்களுக்கு உதவி செய்தல் போன்றவையும் அவற்றில் உள்ளடங்கும்.

இந்த ஹதீஸில் நல்லவிடயங்களுக்காக செலவழிக்கும் ஒருவனுக்கு, அல்லாஹ் தனது நலவுகளிலிருந்து செலவழிப்பதாகவும், அவனது கொடையிலிருந்து பகரம் வழங்குவதாகவும் அல்லாஹ்விடமிருந்து ஒரு வாக்குக் கூறப்பட்டுள்ளது. அல்லாஹ் கூறுகின்றான், **"என்னுடைய ரப்பு**

தான் நாடியவர்களுக்கு ரிஸ்கை விசாலமாகவும், குறைவாகவும் கொடுப்பான். மேலும், நீங்கள் எதை செலவழித்தாலும் அதற்கு அவன் பகரம் தருவான். ரிஸ்க் அளிப்பவர்களில் அவனே சிறந்தவன் என (நபியே) நீர் கூறுவீராக" (ஸபஉ : 39)

யார் தனது குடும்பத்திற்கோ, பெற்றோருக்கோ, உறவினர்களுக்கோ, ஏழைகளுக்கோ, தேவையுள்ளோருக்கோ, செலவழித்தால் அல்லது பலதரப்பட்ட நல்வழிகளில் செலவழித்தால் அல்லாஹ் அவருக்குக் கூலியை எழுதுவான். அவர் செலவழித்ததைப் பகரம் செய்யும் அளவு ரிஸ்க் வழங்குவான். அது அல்லாஹ்வின் கொடை. தான் நாடியவர்களுக்கு அதை அவன் வழங்குவான். அல்லாஹ் மகத்தான கொடை உடையவன்.

ஹதீஸ் எண் : 16

عَنْ أَبِي هُرَيْرَةَ: عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: "مَا يُصِيبُ المُسْلِمَ، مِنْ نَصَبٍ وَلاَ وَصَبٍ، وَلاَ هَمٍّ وَلاَ حُزْنٍ وَلاَ أَذًى وَلاَ غَمٍّ، حَتَّى الشَّوْكَةِ يُشَاكُهَا، إِلَّا كَفَّرَ اللَّهُ بِهَا مِنْ خَطَايَاهُ" (متفق عليه)

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், **“ஒரு முஸ்லிமுக்கு ஏற்படும் எந்தக் களைப்போ, நோயோ, கவலையோ, துக்கமோ, நோவினையோ, பயத்தை ஏற்படுத்தும் கவலையோ தைக்கும் முள்ளாக இருப்பினும், அவற்றின் மூலமாக அல்லாஹ் அவரது பாவங்களை மன்னிக்கின்றான்.”** (ஆதாரம் : புகாரி, முஸ்லிம்)

விளக்கம் : இந்த உலகில் மனிதன் கஷ்டங்களுக்கும், துன்பங்களுக்கும் கவலைகளுக்கும் இலக்காகக்கூடியவன்.

இந்த ஹதீஸில் நபியவர்கள் ஒரு முக்கிய விடயத்தைக் கற்றுத் தருகின்றார்கள். அதை நாம் எமது அனைத்து நிலைமைகளிலும் ஞாபகித்துக் கொள்வது அவசியமாகும். அது உள்ளத்தை மகிழ்விக்கும், அமைதியைத் தரும் ஒரு விடயமாகும்.

அதாவது ஒரு மு.்.மினுக்கு ஒரு களைப்போ, நோயோ, கவலையோ, பயமோ, துக்கமோ, நோவினையோ ஏற்பட்டால் அல்லாஹ் அவற்றின் மூலம் அவரது சிறுபாவங்களை மன்னிக்கின்றான். எனவே, இந்த சோதனைகள் பாவங்கள் மன்னிக்கப்படக் காரணமாக அமைந்துவிடுகின்றன. சோதனையிலிருந்து வெளியேறும் போது பாவங்களில் இருந்து தூய்மையானவனாகவும், அல்லாஹ்வுக்கு நெருக்கமானவனாகவும் அவன் வெளியேறுவான்.

“தைக்கும் ஒரு முள்ளாக இருப்பினும்” என்ற நபி (ஸல்) அவர்களின் கூற்றின் மூலம், முள் தைப்பது போன்ற சிறிய நோவினை உட்பட அனைத்து நோவினைகளும் பாவங்களை மன்னிக்கச் செய்யும் என்பதை விளங்கலாம்.

இதை மனிதன் அறிந்துகொண்டால் அல்லாஹ்வின் நலவைக் கொண்டு அவன் சந்தோசமடையட்டும். எப்போதும், பொறுமையுடனும், அல்லாஹ்வைப் பொருந்திக்கொண்டும், நன்மையை எதிர்பார்த்தும் இருப்பதில் கவனம் செலுத்தட்டும். யார் அல்லாஹ்வைப் பொருந்திக் கொள்கின்றாரோ, அவரை அல்லாஹ் பொருந்திக்கொள்வான். மேலும், எனையோரையும் அவரைப் பொருந்திக்கொள்ளச் செய்வான். மேலும், அவரை அல்லாஹ் கண்ணியப்படுத்தி, பல வெகுமதிகளையும் கொடுப்பான்.

ஹதீஸ் எண் : 17

عَنْ أَبِي هُرَيْرَةَ، قَالَ: قَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: " لَا تَدْخُلُونَ الْجَنَّةَ حَتَّى تُؤْمِنُوا، وَلَا تُؤْمِنُوا حَتَّى تَحَابُّوا، أَوَلَا أَدُلُّكُمْ عَلَى شَيْءٍ إِذَا فَعَلْتُمُوهُ تَحَابَبْتُمْ؟ أَفْشُوا السَّلَامَ بَيْنَكُمْ" (رواه مسلم)

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக, அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், **“நீங்கள் ஈமான் கொள்ளும் வரை சுவனம் நுழையமாட்டீர்கள். நீங்கள் ஒருவருக்கொருவர் அன்புகொள்ளும் வரை ஈமான் கொள்ளமாட்டீர்கள். நான் உங்களுக்கு ஒரு விடயத்தை அறிவித்துத் தரட்டுமா? அதை நீங்கள் செய்தால் உங்களுக்கு மத்தியில் அன்புகொள்வீர்கள். உங்களுக்கு மத்தியில் ஸலாமைப் பரப்புங்கள்.”** (ஆதாரம் : முஸ்லிம்)

விளக்கம் : இந்த ஹதீஸ் மிக முக்கிய ஒரு விடயத்தின் பால் எம்மைத் தூண்டுகின்றது. அதுதான், நாம் எமக்கு மத்தியில் அன்புகொள்வது.

நபி (ஸல்) அவர்கள் நாம் ஈமான் கொள்ளும் வரை சுவனம் நுழையமாட்டோம் என்றும், மேலும், நாம் ஒருவரையொருவர் அன்புகொள்ளாதவரை உண்மையான முஃமின்களாக மாட்டோம் என்றும் கூறுகின்றார்கள்.

மேலும், எமக்கு மத்தியில் அன்பை உண்டாக்கிக் கொள்வதற்கு இலகுவான ஒரு விடயம் உள்ளது. அதை நாம் செய்தால் எமக்கு மத்தியில் அன்பு ஏற்பட்டுவிடும்.

அந்த இலகுவான அம்சம் என்னவெனில், ஸலாமைப் பரப்புவதாகும். ஸலாமைப் பரப்புவதென்றால், மனிதர்களுக்கு ஸலாம் கூறுவதன் மூலம் அதைப் பரவச் செய்வதாகும்.

எனவே, முஸ்லிம்களுக்கு மத்தியில் அன்பு உண்டாக ஸலாம் ஒரு காரணமாக இருப்பதும், அன்பு ஏற்படுவது ஈமான் அதிகரிக்கக் காரணமாக இருப்பதும், ஈமான் அதிகரிப்பது சுவனம் நுழையக் காரணமாக இருப்பதும் இந்த ஹதீஸின் மூலம் நாம் அறிந்துகொண்ட விடயங்களாகும்.

ஸலாமின் வகைகளில் மிகச் சிறந்தது, **“அஸ்ஸலாமு அலைகும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு”** என்று கூறுவதாகும்.

மிகச் சிறந்த பதில், **“வஅலைக்குமுஸ்ஸலாம் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு”** என்று கூறுவதாகும். ஒரு மனிதன் **“அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹ்”** என்றோ, **“அஸ்ஸலாமு அலைக்கும்”** என்று மாத்திரமோ கூறினால், அது போதுமாகும் இன்ஷா அல்லாஹ். ஆனாலும், **“அஸ்ஸலாமு அலைகும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு”** என்று பூரணமாகக் கூறினால், அதுவே சிறந்ததாகும்.

எனவே, ஒரு முஸ்லிம் ஸலாமைப் பரப்புவதில் ஆர்வம் காட்டுவதும், கவனம் செலுத்துவதும் அவசியமாகும். வெட்கப்படமாட்டார். ஏனெனில் அது நற்கூலிக்கான ஒரு வழியாகும். மேலும், ஈமான் அதிகரிக்கவும், சுவனம் நுழையவும் ஒரு காரணியாகும்.

ஹதீஸ் எண் : 18

عَنْ أَبِي سَعِيدٍ الْخُدْرِيِّ، أَنَّ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: "لَا يَنْظُرُ الرَّجُلُ إِلَى عَوْرَةِ الرَّجُلِ، وَلَا الْمَرْأَةُ إِلَى عَوْرَةِ الْمَرْأَةِ" (رواه مسلم)

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ ஸஈத் அல்குத்ரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், **“ஓர் ஆண் இன்னோர் ஆணின் மர்மஸ்தானத்தைப் பார்க்கவேண்டாம். மேலும். ஒரு பெண் இன்னொரு பெண்ணின் மாமஸ்தானத்தைப் பார்க்கவேண்டாம்.”** (ஆதாரம் : முஸ்லிம்)

விளக்கம் : இந்த ஹதீஸ், நாம் கற்று, செயற்படுத்துவது கடமையான ஒரு முக்கிய விடயத்தை எமக்குக் கற்றுத் தருகின்றது.

ஒரு மனிதன் ஆணாக இருப்பினும், பெண்ணாக இருப்பினும் மறைக்கவேண்டிய ஒரு மர்மஸ்தானம் அவனுக்கு உண்டு. ஏனையோர் அதைவிட்டும் பார்வையைத் தாழ்த்துவது அவசியமாகும்.

இது, இரு ஆண்களுக்கு மத்தியிலும், இரு பெண்களுக்கு மத்தியிலும் உள்ள தொடர்பிலாகும். எனவே, ஆண் - பெண் தொடர்பில் கட்டாயமாகவே இந்த சட்டம் வரும்.

இதை நாம் அறிந்துகொண்டால், நாம் எமது மர்மஸ்தானங்களைப் பாதுகாப்பது காட்டாயமாகும். மக்கள் காணாமல் அதை மறைப்பதும் அவசியமாகும். பார்வையின் மூலமோ, தொடுகையின் மூலமோ இவ்விடயத்தில் நாம் அலட்சியமாக இருப்பது கூடாது. அதேநேரம், இந்த விடயம் விட்டுக்கொடுப்பிற்கோ, கவனயீனத்திற்கோ, பரிகாசத்திற்கோ ஒரு போதும் அனுமதிக்கப்படமுடியாது என்பதையும் அறிந்துகொள்வது கட்டாயமாகும்.

ஹதீஸ் எண் : 19

عَنِ الصَّعْبِ بْنِ جَثَّامَةَ اللَّيْثِيِّ، أَنَّهُ أَهْدَى لِرَسُولِ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ حِمَارًا وَحْشِيًّا، وَهُوَ بِالأَبْوَاءِ، أَوْ بِوَدَّانَ، فَرَدَّهُ عَلَيْهِ، فَلَمَّا رَأَى مَا فِي وَجْهِهِ قَالَ: "إِنَّا لَمْ نَرُدَّهُ عَلَيْكَ إِلَّا أَنَّا حُرُمٌ" (متفق عليه)

ஸ.்.ப் பின் ஜஸ்ஸாமா (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்கள் அப்வா அல்லது வுத்தான் என்ற இடத்தில் இருக்கும் போது, அவர்களுக்கு வேட்டையாடப்பட்ட ஒரு மரையை அன்பளிப்பாக வழங்குகிக்னறார்கள். எனினும் நபியவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அப்போது, அவரது முகத்தில் கவலையுணர்வை நபியவர்கள் கண்டபோது, **“நாம் இஹ்ராமுடன் இருப்பதால் தான் அதனை உமக்குத் திருப்பித் தந்தோம்”** என்றார்கள். (ஆதாரம் : புகாரி, முஸ்லிம்)

விளக்கம் : மதிப்பிற்குரிய நபித்தோழர்கள் நபி (ஸல்) அவர்களுக்கு அன்பளிப்புகளை வழங்குபவர்களாக இருந்தார்கள். அவற்றை ஏற்றுக்கொண்டு, பிரதியுபகாரம் செய்வதே நபியவர்களின் வழமை.

நபியவர்களின் ஹஜ் பயணத்தில் ஸ.்.ப் பின் ஜஸ்ஸாமா எனும் ஒரு மனிதர் நபியவர்களிடத்தில் வருகின்றார். நபியவர்கள் சாப்பிடுவதற்காக தான் வேட்டையாடிய ஒரு பிராணியையும் கொண்டுவருகின்றார். எனினும் நபி (ஸல்) அவர்கள் அவர்கள் அதை ஏற்கவில்லை. ஏனெனில் அவர்கள் இஹ்ராமுடன் இருந்தார்கள். வேட்டையாடவது இஹ்ராமுடன் இருப்பவர்களுக்க தடுக்கப்பட்டதாகும்.

அம்மனிதரின் அன்பளிப்பை நபியவர்கள் திருப்பிக் கொடுத்தபோது, அவர் கவலையுற்றார். உடனே நபியவர்கள் அதற்கான காரணத்தைப் புரியவைக்கும் விதத்தில், **“நாம்**

இஹ்ராமுடன் இருப்பதனால் தான் அதனைத் திருப்பித் தந்தோம்'' என்றார்கள். அப்போது, அம்மனிதர் சந்தோசப்பட்டார். இச்சம்பவத்தை தனது தோழர்களுக்கும், மாணவர்களுக்கும் அறிவிக்கவும் செய்தார்.

இதன் மூலம், காரணங்களையும், நியாயங்களையும் தெளிவுபடுத்துவதன் மூலம் ஷைத்தானுக்கான வழியை அடைப்பதன் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்கின்றோம். இதற்கு ஆதாரமாக பின்வரும் அல்குர்ஆன் வசனத்தை எடுக்கலாம், **''(நபியே) எது மிக அழகானதோ அதைக் கூறுமாறு என்னுடைய அடியார்களுக்கு நீங்கள் கூறுங்கள்.''** (அல்-இஸ்ரா – 53)

இமாம் நவவி அவர்கள் தங்களது "ரியாளுஸ் ஸாலிஹீன்" எனும் நூலில், நற்குணத்தின் பாடத்தில் இந்த ஹதீஸைக் கொண்டுவருகின்றார்கள். மனதை ஆறுதல் படுத்துவது, உள்ளங்களை அமைதிப்படுத்துவது, நியாயங்களைத் தெளிவுபடுத்துவது என்பன நற்குணங்களில் உள்ளவை என்பதைத் தெளிவுபடுத்துவதே அவரது நோக்கமாகும்.

ஹதீஸ் எண் : ௨0

عن حُذَيْفَةُ قال : سَمِعْتُ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُولُ: "لَا يَدْخُلُ الجَنَّةَ قَتَّات" (متفق عليه)

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஹுதைபா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், **"கோள் சொல்பவன் சுவனம் நுழையமாட்டான்"** (அதாரம் : புகாரி, முஸ்லிம்)

விளக்கம் : இந்த ஹதீஸ் நாவின் விபரீதங்களை எச்சரிக்கும் ஹதீஸ்களில் ஒன்றாகும். நாவின் விபரீதங்கள் பல உள்ளன. புறம் பேசுதல், கோள் சொல்லுதல் என்பன அவற்றில் உள்ளவையாகும்.

இமாம் நவவி (ரஹ்) கூறுகின்றார்கள், **"அறிந்துகொள்! இந்த இரண்டு குணங்களும் மக்களிடம் அதிகம் பரவியுள்ள, மிகக் கெட்ட இரு குணங்களாகும். மிகக் குறைவானவர்களே அவற்றில் இருந்து தப்பியுள்ளார்கள்."**

இந்த ஹதீஸில் நபியவர்கள் இழிவான குணமாகவும், பெரும்பாவமாகக் கொள்ளப்படும் மோசமான பாவமாகவும் இருக்கும் ஒரு குணத்தை எமக்கு தடுக்கின்றார்கள். அதுதான் கோள் சொல்வதாகும்.

இங்கு **"கத்தாத்"** எனப்படுவது கோள் சொல்பவனையாகும். அவன் சுவனம் நுழைய மாட்டான் என நபியவர்கள் கூறுகின்றார்கள்.

கோள் என்பது, **"மக்களுக்கு மத்தியில் குழப்பத்தை உண்டுபண்ணும் நோக்கில் செய்திகளைப் பரப்புவதாகும்."** பிரச்சினைகளும், சண்டைகளும், விரோதங்களும் ஏற்பட இது ஒரு முக்கிய காரணியாகும்.

எனவே, முஸ்லிமான ஒவ்வொரு ஆணும், பெண்ணும் அதில் மிக எச்சரிக்கையான இருப்பதுடன், அதை விட்டும் எச்சரிக்கை செய்வதும் அவசியமாகும். ஏனெனில், சுவனம் தடுக்கப்படுவதற்கும், கப்ரில் வேதனை செய்யப்படுவதற்கும் இது ஒரு முக்கிய காரணியாகும்.

ஹதீஸ் எண் : ௨௧

عن جابر بن عبد الله قال : قال رسول الله صلى الله عليه وسلم "لَا يَغْرِسُ مُسْلِمٌ غَرْسًا، وَلَا يَزْرَعُ زَرْعًا، فَيَأْكُلَ مِنْهُ إِنْسَانٌ، وَلَا دَابَّةٌ، وَلَا شَيْءٌ، إِلَّا كَانَتْ لَهُ صَدَقَةً" (رواه البخاري ومسلم)

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், **“யாராவது ஒரு முஸ்லிம் ஒரு மரத்தை நட்டி அல்லது ஒரு பயிரை விதைத்து அதிலிருந்து ஒரு மனிதனோ, பறவையோ, மிருகமோ சாப்பிட்டால் அதன் மூலம் அவருக்கு தர்மம் கொடுத்த கூலி கிடைக்கும்.”** (ஆதாரம் : புகாரி, முஸ்லிம்)

விளக்கம் : விவசாயம் மனித செயற்பாடுகளில் மிக முக்கிய ஒன்றாகும். தேவையான உணவைப் பெற்றுக்கொள்வதற்கு அது ஒரு காரணியாகும். சிலபோது, செல்வத்திற்கும் அது ஒரு காரணியாக இருக்கும்.

ஒரு மனிதன் ஒரு பயிரை நட்டி அதிலிருந்து மனிதனோ. பறவையோ. மிருகமோ சாப்பிட்டால் பயிரிட்டவருக்கு அதை அல்லாஹ் தர்மமாக எழுதிவிடுகின்றான். இது அல்லாஹ்வின் பேருபகாரங்களில் ஒன்றாகும். இந்த விவசாயி அடிப்படையில் தர்மத்திற்காக பயிரிடவில்லை. மாறாக, உணவுக்காகவோ, வியாபாரத்திற்காகவோதான் நட்டியிருந்தார்.

இந்த விடயம் விவசாயத்திற்கு மாத்திரமானதல்ல. மனிதன் செய்கின்ற அனைத்து நல்ல விடயங்களிலும் ஏனையோர் அதன் மூலம் பயன்பெற்றால் அவனுக்கு அதற்குக் கூலி வழங்கப்படும். யாராவது ஒரு கிணறை வெட்டி அதன் மூலம் மனிதனோ, மிருகமோ, பறவையோ நீர் பருகினால் அல்லது நிழல்பெறும் இடமொன்றை ஏற்படுத்தி அதன் மூலம் மனிதனோ,

மிருகமோ, பறவையோ நிழல் பெற்றால் அதனால் அவருக்கு கூலி உண்டு. இவற்றைத் தவிர ஏனைய பயனுள்ள செயல்களுக்கும் இக்கூலி உண்டு. இங்கு முக்கிய அம்சம் என்னவெனில், மனிதன் அந்த செயல்களை செய்யும் போது நன்மையை நாடிச் செய்யவேண்டும்.

ஹதீஸ் எண் : ௨௨

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللَّهُ عَنْهُ: أَنَّ رَجُلًا أَتَى النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَتَقَاضَاهُ، فَأَغْلَظَ فَهَمَّ بِهِ أَصْحَابُهُ، فَقَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: «دَعُوهُ، فَإِنَّ لِصَاحِبِ الحَقِّ مَقَالًا» (متفق عليه)

அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், நபி (ஸல்) அவர்கள் ஒரு மனிதருக்குக் கடன்பட்டிருந்தார்கள். அவர் நபி (ஸல்) அவர்களிடம் கடனைக் கேட்டு வந்து கடுமையாக நடந்துகொண்டார். நபித்தோழர்கள் அவரைத் தாக்கமுற்பட்டார்கள். அப்போது நபியவர்கள், **“அவரை விட்டுவிடுங்கள். கடன் உரிமையாளருக்கு பேச அனுமதியுள்ளது”** என்றார்கள். (ஆதாரம் : புகாரி, முஸ்லிம்)

விளக்கம் : நபி (ஸல்) அவர்கள் ஒரு மனிதரிடமிருந்து ஒரு ஒட்டகத்தை வாங்கி, அதன் பணத்தை சில காலங்களுக்குப் பின்னர் தருவதாக ஒப்பந்தம் செய்துகொண்டார்கள்.

அக்குறிப்பிட்ட காலம் நிறைவடைந்த பின்னர் அம்மனிதர் நபியவர்களிடமிருந்து பணத்தை எடுக்க வந்தார். நபியவர்களிடம் நுழைந்து பணத்தைக் கோபத்துடனும் கடுமையான தொனியிலும் கேட்டார்.

நபித்தோழர்கள் அவரது பேச்சைக் கேட்டவுடன் கோபம் கொண்டு அவரைத் தாக்க முற்பட்டார்கள். ஏனெனில், அவர் நபியவர்களுடன் பூரண ஒழுக்கத்துடன் நடந்துகொள்ளவில்லை. அப்போது நபியவர்கள், “அவரை விடுங்கள். கடன் உரியவருக்கு பேச உரிமையுள்ளது” என்கிறார்கள். அதாவது, அவர் அவரது உரிமையைக் கேட்கும் காலமெல்லாம் அவர் விரும்புவது போன்று பேச அவருக்கு அனுமதியுள்ளது.

இந்த ஹதீஸின் மூலம் மக்களோடு நாம் பழகும் சந்தர்ப்பங்களில் பயன்தரும் ஒரு முக்கிய பயனை நாம் கற்றுக்கொள்கின்றோம். அதாவது, ஒரு மனிதன் தன் உரிமையைக் கேட்டால் அவனது பேச்சுக்கு செவிசாய்ப்பதும், அதைக் கவனத்தில் கொள்வதும் எமது கடமையாகும். அவர் கோபம் கொண்டு பேசினாலோ, அல்லது சப்தத்தை உயர்த்தினாலோ நாம் அவரைக் கண்டிக்கமுடியாது.

நபியவர்கள் காட்டித் தந்துள்ள இந்த ஒழுக்கத்தின் மூலமே உரிமைகள் அதனுடையவர்களைச் சென்றடையும். எமக்கு மத்தியில் பிரச்சினைகள், குழப்பங்கள், சச்சரவுகள் குறையும்.

ஹதீஸ் எண் : 23

عن أبي قتادة رضي الله عنه قال : قال النبي صلى الله عليه وسلم «مَنْ سَرَّهُ أَنْ يُنْجِيَهُ اللهُ مِنْ كُرَبِ يَوْمِ الْقِيَامَةِ، فَلْيُنَفِّسْ عَنْ مُعْسِرٍ، أَوْ يَضَعْ عَنْهُ» (رواه مسلم)

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ கதாதா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள், **“மறுமையின் கஷ்டங்களை விட்டும் அல்லாஹ் தன்னைப் பாதுகாப்பது யாருக்கு விருப்பமாக உள்ளதோ, அவர் கஷ்டமுடைய கடனாளிக்கு இலகுபடுத்தட்டும். அல்லது விட்டுக்கொடுக்கட்டும்.”** (ஆதாரம் : முஸ்லிம்)

விளக்கம் : மறுமை நாள் என்பது அல்லாஹ் தனது அடியார்களை விசாரித்து, அவர்கள் செய்துள்ள நலவு, கெடுதிகளுக்கு கூலி வழங்குகின்ற நாள். அவர்கள் கருத்துவேற்றுமை கொண்டிருந்த விடயங்கள் பற்றி அல்லாஹ் அந்நாளில் தீர்ப்பு வழங்குவான். அவர்களை நரகிற்கு அல்லது சுவனத்திற்கு அனுப்பவான்.

அந்த மகத்தான நாளில் அதன் ஆச்சரியமான நிலைமைகள், அமளிதுமளிகள் என்பவற்றின் காரணமாக மக்கள் கடுமையாக கஷ்டப்படுவார்கள்.

எனவே, அந்த மறுமையின் கஷ்டங்கள், அமளிதுமளிகளை விட்டும் யார் தன்னை அல்லாஹ் பாதுகாக்கவேண்டும் என விரும்புகின்றாரோ. அவர் ஒரு கஷ்டமுடைய கடினாளிக்கு இலகுபடுத்தட்டும். அல்லது விட்டுக்கொடுக்கட்டும். கஷ்டமுள்ள கடனாளிகளுக்கு இலகுபடுத்துவது, மேலும் விட்டுக்கொடுப்பது நல்ல அமல்களாகும். என்கிலும் அவை விரும்பத்தக்கவையே அன்றி கடமை அல்ல. எனவே, தனக்குக் கடன் தரவேண்டிய சகோதரனின் தவணையை நீட்டிக் கொடுப்பார். அல்லது முழுமையாகவோ, ஒரு பகுதியையோ விட்டுக்கொடுப்பார்.

உங்களிடமிருந்து யாராவது கடன் எடுத்து, அவர் கட்டிமுடிக்கமுடியாத கஷ்டவாளி என நீங்கள் உறுதியாக அறிந்துகொண்டால் அவருக்குத் தவணை கொடுங்கள், அல்லது அவரை மன்னித்து ஒரு பகுதியையோ, முழுவதையுமோ விட்டுக்கொடுங்கள். நீங்கள் அவ்வாறு செய்தால் பெரியதொரு நன்மையை செய்துவிட்டீர்கள். மறுமையின் கஷ்டங்களிலிருந்து உங்களுக்குப் பாதுகாப்புக் கிடைக்கலாம். மேலும், அல்லாஹ்வின் பொருத்தமும், சுவனமும் கிடைக்கலாம்.

ஹதீஸ் எண் : உ௰

عَنْ أَبِي هُرَيْرَةَ: أَنَّ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: "مَنْ غَشَّنَا فَلَيْسَ مِنَّا" (رواه مسلم)

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், **“யார் எம்மை ஏமாற்றுகின்றாரோ அவர் எம்மைச் சார்ந்தவர் அல்ல”** (ஆதாரம் : முஸ்லிம்)

விளக்கம் : ஒரு மழை நாளொன்று நபி (ஸல்) அவர்கள் சந்தையில் நடந்து செல்கின்றார்கள்.

நபியவர்கள் நடந்துகொண்டிருக்கும் போது கோதுமை போன்ற உணவுக்குவியல் ஒன்றை விற்றுக்கொண்டிருக்கும் ஒருவருக்குப் பக்கத்தால் நடந்து செல்கின்றார்கள். மழையில் அது நனைந்து ஈரமாகி இருந்தது. அவர் நனைந்த பகுதியை மறைக்கும் வண்ணம் மக்கள் அதனைக் காணாமல் குவியலின் அடிப்பகுதியில் வைத்துவிடுகின்றார்.

இப்பொருளில் ஒரு குறை இருப்பதை நபியவர்கள் உணர்ந்துகொண்டார்கள். உடனே தனது கையை நுழைவித்துப் பார்த்த பேது ஈரத்தன்மையை உணர்ந்தார்கள்.

இச்செயலை அறிந்தவுடன் நபியவர்கள் அம்மனிதரைக் கண்டித்து, **“மக்கள் காண்பதற்காக இதை மேலால் வைக்கக் கூடாதா? யார் எங்களை ஏமாற்றுகின்றாரோ அவர் எம்மைச் சார்ந்தவர் அல்ல”** என்று கூறினார்கள்.

அதாவது, ஒரு வியாபாரி அவரது நடவடிக்கைகளில் உண்மையாகவும், தெளிவாகவும் இருப்பது அவசியமாகும். புகழத் தகுதியற்ற ஒரு பொருளைப் புகழமாட்டார். பொருட்களில் மக்கள் வாங்கப் பின்வாங்குமளவு உள்ள

குறைகளை மறைக்கமாட்டார். அவரது பொருட்களின் விலைகளை நியாயமின்றி அதிகரிக்கமாட்டார்.

இந்த ஹதீஸ் ஏமாற்றம் எனும் இந்த இழிவான பாவத்தைத் தடுக்கின்றது. அதைத் தவிர்க்குமாறும் எச்சரிக்குமாறும் மக்களைத் தூண்டுகின்றது. ஒரு முஸ்லிம் தனது வியாபாரத்திலோ, தொழிலிலோ, உபதேசத்திலோ, கல்வியிலோ ஏனையவைகளிலோ ஏமாற்றம் செய்வது கூடாது. ஏமாற்றம் எந்த உருவத்தில், எந்த வகையில் இருந்தாலும் அது அல்லாஹ்வின் மார்க்கத்தில் ஹராமாகும்.

ஹதீஸ் எண் : ௨௯

عنْ أَبِي أُمَامَةَ، أَنَّ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: «مَنِ اقْتَطَعَ حَقَّ امْرِئٍ مُسْلِمٍ بِيَمِينِهِ، فَقَدْ أَوْجَبَ اللهُ لَهُ النَّارَ، وَحَرَّمَ عَلَيْهِ الْجَنَّةَ» فَقَالَ لَهُ رَجُلٌ: وَإِنْ كَانَ شَيْئًا يَسِيرًا يَا رَسُولَ اللهِ؟ قَالَ: «وَإِنْ قَضِيبًا مِنْ أَرَاكٍ» (رواه مسلم)

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ உமாமா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், **“தனது சத்தியத்தின் மூலம் யார் ஒரு முஸ்லிமின் உடைமையைப் பறித்துக் கொள்கின்றாரோ, அவருக்கு அல்லாஹ் நரகைக் கட்டாயமாக்கிவிடுவான்.”** அப்போது ஒரு மனிதர். **“அதுவொரு அற்பமான பொருளாக இருந்தாலுமா?”**எனக் கேட்க, நபியவர்கள், **“ஒரு அராக் குச்சியாக இருந்தாலும்”** என்றார்கள். (ஆதாரம் : முஸ்லிம்)

விளக்கம் : மக்களது உடைமைகள் இஸ்லாம் அதிகம் கவனம் செலுத்திய அம்சங்களில் ஒன்றாகும்.

எனவே, யாருடைய எந்தவொரு உடைமையையும் அது பணமாக இருந்தாலும், ஏனையவையாக இருந்தாலும் நாம் எடுப்பது கூடாது.

இந்த ஹதீஸில் நபியவர்கள் மக்களது உடைமைகளை எடுப்பதை எச்சரிக்கின்றார்கள். மேலும், யார் பொய்ச்சத்தியத்தின் மூலம் ஒரு முஸ்லிமின் உடைமையை எடுக்கின்றாரோ, அவரது கூலி அவரை நரகில் நுழையச் செய்வதும் சுவனத்தை விட்டும் தடுப்பதும் என்றும் கூறுகின்றார்கள்.

நபித் தோழர்கள் இந்தப் பேச்சைக் கேட்ட போது, நபியவர்களிடம், **“அல்லாஹ்வின் தூதரே! அற்பமான பொருளாக இருந்தாலுமா?”** எனக் கேட்கின்றார்கள். அதாவது,

சிறிய அற்பமான ஒரு பொருளை மக்கள் உடைமைகளிலிருந்து எடுப்பவரையும் இது உள்ளடக்குமா? என்பதே அவர்களது கேள்வி. அதற்கு நபியவர்கள், **“ஒரு அராக் குச்சியாக (மிஸ்வாக் குச்சி) இருந்தாலும்”** என்கின்றார்கள். அதாவது, மக்களது சொத்துக்களையும், உடமைகளையும் எடுப்பது பெரும் பாவம். அது அராக் குச்சியாக இருந்தாலும் சரியே. அல்லாஹ் எங்களை மன்னித்துப் பாதுகாக்க வேண்டும்.

ஹதீஸ் எண் : 26

عن أبي موسى رضي الله عنه أَنَّ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، بَعَثَ مُعَاذًا وَأَبَا مُوسَى إِلَى اليَمَنِ قَالَ: «يَسِّرَا وَلاَ تُعَسِّرَا، وَبَشِّرَا وَلاَ تُنَفِّرَا، وَتَطَاوَعَا وَلاَ تَخْتَلِفَا» (متفق عليه)

அபூ மூஸா அல்அஷ்அரீ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், நபி (ஸல்) அவர்கள் என்னையும் முஆத் (ரலி) அவர்களையும் யமனுக்கு அனுப்பும் போது இவ்வாறு கூறினார்கள், **"இலகுபடுத்துங்கள், கடினப்படுத்தாதீர்கள், நன்மாராயம் கூறுங்கள், வெறுப்பை ஏற்படுத்தாதீர்கள், ஒருவருக்கொருவர் கட்டுப்பட்டிருங்கள், கருத்துவேற்றுமை கொள்ளாதீர்கள்."** (ஆதாரம் : புகாரி, முஸ்லிம்)

விளக்கம் : நபி (ஸல்) அவர்கள் அபூ மூஸா அல்அஷ்அரீ, முஆத் பின் ஜபல் ஆகிய இரு நபித்தோழர்களையும் மார்க்கத்தை எத்திவைப்பதற்காகவும், மக்களுக்குக் கற்றுக் கொடுப்பதற்காகவும் யமனுக்கு அனுப்பிவைக்கின்றார்கள்.

அவ்விருவரும் பயணிக்க முன்னர் நபி (ஸல்) அவர்கள் அவ்விருவருக்கும் சுருக்கமான, அதேநரம் கருத்தாழமிக்க, மகத்துவமான ஓர் உபதேசத்தை வழங்குகின்றார்கள்.

அவ்விருவருக்கும் கூறினார்கள், **"இலகுபடுத்துங்கள், கடினப்படுத்தாதீர்கள்"** அதாவது, மக்களோடு நடந்துகொள்வதிலும், மார்க்கத்தை எத்திவைப்பதிலும் கடுமையாக நடந்துகொள்ளாதீர்கள், மாறாக, மென்மையாக நடந்துகொள்ளுங்கள். மார்க்கம் கடுமையோ, இருக்கமோ அற்ற இலகுவான ஒன்று என அவர்களுக்குக் கூறுங்கள்.

மேலும் அவர்களுக்குக் கூறினார்கள். **“நன்மாராயம் கூறுங்கள். வெறுப்பை உண்டாக்காதீர்கள்”** அதாவது, மக்களுடன் பேசும் போது அல்லாஹ்வின் கொடையைக் கொண்டு நன்மாராயம் கூறும் விதத்திலும், அவனிடத்தில் இருப்பவற்றில் ஆர்வமூட்டும் விதத்திலும் பேசுங்கள். ஈமானையும், நற்கருமங்களையும் விட்டு அவர்களை தடுக்கின்ற வகையில் வெறுப்பூட்டும் விதமாகப் பேசாதீர்கள்.

பின்பு, மூன்றாவதாக இரு சகோதரர்கள், நண்பர்கள் மற்றும் பயணத் தோழர்களுக்கு முக்கியமான உபதேசத்தையும் செய்கின்றார்கள், நபியவர்கள் கூறுகின்றார்கள், **“உங்களுக்கு மத்தியில் ஒருவருக்கொருவர் கட்டுப்படுங்கள்.”** அதாவது உங்களில் ஒருவர் மற்றவருக்குக் கட்டுப்படட்டும். உங்கள் ஒருவர் தன் தோழர் ஒரு விடயத்தில் ஆர்வமாக இருப்பதைக் கண்டால், அவருக்குக் கட்டுப்படட்டும். ஏனெனில், அது அன்பும், நெருக்கமும், தோழமையும் நிலைத்திருப்பதற்குக் காரணமாக இருக்கும்.

இங்கு நாம் ஒரு முக்கிய விடயத்தைப் புரிந்துகொள்கின்றோம், அதாவது, தனது தோழர்களுடன் இணங்கி, இயன்றளவு முரண்பட்டுக்கொள்ளாமல் இருக்கும் நண்பன் ஸுன்னாவைப் பின்பற்றுகின்றான். கருத்துவேற்றுமைகளையும், முரண்பாடுகளையும் தர்க்கங்களையும் அதிகரித்துக் கொள்பவன், அவனது அச்செயல்கள் மூலமாக ஸுன்னாவை விட்டும் தூரமானவனாகி வடுகின்றான்.

ஹதீஸ் எண் : 27

عَنْ أَبِي مُوسَى الأشعري رضي الله عنه، عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، قَالَ: «مَنْ حَمَلَ عَلَيْنَا السِّلاَحَ فَلَيْسَ مِنَّا» (متفق عليه)

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ மூஸா அல்அஷ்அரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், **"யார் எங்களுக்கெதிராக ஆயுதம் சுமக்கின்றாரோ. அவர் எம்மைச் சார்ந்தவர் அல்ல."** (ஆதாரம் : புகாரி, முஸ்லிம்)

விளக்கம் : பாதுகாப்பு என்பது அல்லாஹ்வின் ஒரு முக்கிய அருளாகும். வாழ்க்கைக்கு மிக அத்தியாவசியமானதுமாகும்.

பாதுகாப்பு எனும் அருளை அல்லாஹ் தன் அடியாளர்களுக்கு வழங்கியுள்ளதாக கூறிக் காட்டுகின்றான். **"எனவே, அவர்கள் இவ் ஆலயத்தின் இரட்சகனை வணங்கட்டும். அவனே, அவர்களுக்கு பசியிலிருந்து உணவளித்தான். மேலும். பயத்திலிருந்து அபயமும் அளித்தான்"** (குறைஷ் : 3-4)

சமூகத்தின் பாதுகாப்பைப் பேணுவதன் முக்கியத்துவம் காரணமாக, மக்களைப் பயமுறுத்தி அவர்கள் மத்தியில் பீதியைப் பரப்பும் நோக்கிலும், அவர்கள் மீது கொலை அச்சுறுத்தல் விடுக்கும் நோக்கிலும் ஆயுதம் சுமப்பதை நபியவர்கள் எச்சரித்துள்ளார்கள். இது, மக்களை விட்டும் தனித்துச் சென்று, ஆட்சியாளர்களுக்குக் கட்டுப்படாமல், அவர்களுக்க எதிராக வெளிப்படுவதையும் குறிக்கும்.

"யார் எங்களுக்கெதிராக ஆயதம் சுமக்கின்றாரோ. அவர் எம்மைச் சார்ந்தவர் அல்ல." என்ற நபி (ஸல்) அவர்களின் கூற்றின் மூலம், முன் கூறிய காரணங்களுக்காக யார் ஆயுதம் ஏந்துகின்றாரோ, அவர் நபியவர்களைப் பின்பற்றுபவர்களில்

இல்லை என்பதையும், இது ஒரு பெரும்பாவம் என்பதையும் விளங்கிக்கொள்ளலாம்.

ஹதீஸ் எண் : 28

عن عبد الله بن مغفل رضي الله عنه أَنَّ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ نَهَى عَنِ الْخَذْفِ، وَقَالَ: "إِنَّهَا لَا تَصِيدُ صَيْدًا، وَلَا تَنْكَأُ عَدُوًّا، وَلَكِنَّهَا تَكْسِرُ السِّنَّ، وَتَفْقَأُ الْعَيْنَ" (متفق عليه)

அப்துல்லாஹ் பின் முகப்பல் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், **நபி (ஸல்) அவர்கள் கற்களால் எரிந்து தாக்குவதைத் தடுத்தார்கள். மேலும் கூறினார்கள், “அவை வேட்டைப் பிராணியை வேட்டையாடமாட்டாது. எதிரியைத் தோற்கடிக்கச் செய்யமாட்டாது. மாறாக, பற்களை உடைக்கும். கண்களைக் குருடாக்கும்.”** (ஆதாரம் : புகாரி, முஸ்லிம்)

விளக்கம் : நபி (ஸல்) அவர்கள், மக்களுக்கு அவர்களது உலக மற்றும் மறுமை விவகாரங்களில் பயனுள்ளவற்றைக் கற்றுக்கொடுப்பதிலும், தீங்கு விளைவிப்பவற்றை விட்டும் தடுப்பதிலும் ஆர்வமாக இருந்தார்கள். நபியவர்களின் அப்பண்பை அல்லாஹ் புகழ்ந்து கூறியுள்ளான். **“நிச்சயமாக உங்களில் இருந்தே ஒரு தூதர் உங்களுக்கு வந்திருக்கின்றார். நீங்கள் துன்புறுவது அவருக்கு கடினமாக இருக்கும். உங்கள் மீது ஆர்வம் கொண்டுள்ளவர். மு.்.மின்களுடன் அன்பாகவும், பரிவாகவும் நடப்பவர்.”** (ஸூரா அத்தவ்பா) மேலும், அவர்களைப் புகழ்ந்து அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான், **“அல்லாஹ், மு.்.மின்கள் மீது அவனது வசனங்களை ஓதிக்காட்டுகின்ற, அவர்களைத் தூய்மைப் படுத்துகின்ற, வேதத்தையும், ஞானத்தையும் அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கின்ற ஒரு தூதுவரை அவர்களில் இருந்தே அவர்களுக்கு அனுப்பியதன் மூலம் அவர்களுக்கு நிச்சயமாக அவன் உபகாரம் செய்விட்டான்”** (ஸூரா ஆலு இம்ரான்)

இந்த ஹதீஸில் சில மக்கள் ஜாஹிலிய்யாக் காலத்திலும், இஸ்லாத்தின் ஆரம்ப காலங்களிலும் செய்துவந்த ஒரு வேளையை நபியவர்கள் தடுக்கின்றார்கள். அதுதான், கற்களால் எரிதல். மேலும், தடைக்கான காரணத்தையும் தெளிவுபடுத்துகின்றார்கள். அதாவது, கற்கலால் எறிவதில் எப்பயனும் இல்லை. அது வேட்டைப் பிராணியைக் கொல்லமாட்டாது. எதிரியைத் தோற்கடிக்கச் செய்யமாட்டாது. மாறாக, அது தீங்கை ஏற்படுத்தும் விடயமே. அது பல்லைத் தாக்கி அதனை உடைக்கும். மேலும், கண்ணில் பட்டு அதனை அழிக்கும்.

இத்தடை சிறுவர். பெரியோர் என அனைத்து மக்களுக்கும் பொதுவானது. எனினும், சிறுவர்களுக்கு அதை அதிகம் ஞாபகமூட்டவேண்டிய தேவை உள்ளது. அவர்களிடத்தில் தான் இது அதிகமாக உள்ளது. அதனால், அவர்களை உபதேசித்து, கற்றுக்கொடுத்து, வழிகாட்டுவது அவசியமாகும்.

ஹதீஸ் எண் : 29

عن أَنَسٌ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ: " خَدَمْتُ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ عَشْرَ سِنِينَ، فَمَا قَالَ لِي: أُفٍّ" (متفق عليه)

அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள், **“நான் நபி (ஸல்) அவர்களுக்கு பத்து வருடங்கள் பணிவிடை செய்துள்ளேன். ஒருபோதும் எனக்கு “சீ” எனக் கூறியதில்லை.”** (ஆதாரம் புகாரி, முஸ்லிம்)

விளக்கம் : நபியவர்கள் மக்காவில் இருந்து ஹிஜ்ரத் செய்து, மதீனாவை வந்தடைந்த போது, அனஸ் (ரலி) அவர்களின் தாயார் அவரை அழைத்துக் கொண்டு நபியவர்களிடம் வருகிறார்கள். அப்போது அவருடைய வயது பத்தாக இருந்தது. அவர்களது தாயார் நபியவர்களைப் பார்த்து இவ்வாறு கூறுகின்றார்கள், “அல்லாஹ்வின் தூதரே! இது எனது மகன் அனஸ். உங்களுக்கு பணிவிடை செய்வதற்காக இவரை நான் அழைத்துக்கொண்டுவந்துள்ளேன்.” அப்போது நபியவர்கள் அவரை வரவேற்றார்கள்.

அந்நாளில் இருந்து அனஸ் (ரலி) அவர்கள் நபியவர்களின் பணிவிடையாளனாக இருந்தார்கள். நபியவர்களுக்குப் பணிவிடை செய்வார்கள். அவர்கள்து நிறைய தேவைகளை நிறைவேற்றி வைப்பார்கள். மிகக் குறைவாகவே அவர்களை விட்டும் பிரிந்திருப்பார்கள்.

இந்த ஹதீஸில் அனஸ் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களின் நற்குணங்களைப் பற்றிக் கூறுகின்றார்கள். தான் நபி (ஸல்) அவர்களுக்கு பத்து வருடங்கள் பணிவிடை செய்ததாகவும். அந்த நீண்ட காலப்பகுதியில், கண்டிப்பையோ, ஏச்சையோ குறைந்த பட்சம் “சீ” என்ற வார்த்தையையாவது

நபியவர்களிடமிருந்து அவர்கள் கேட்கவில்லை என்றும் கூறுகின்றார்கள்.

இது நபியவர்கள் தனது தோழர்களுகளுடன் நற்குணமாக நடந்துகொண்டமையைக் காட்டுகின்றது. அவர்கள், சிறுவர்களாகவோ, பெரியவர்களாகவோ, பணிவிடையாளர்களாகவோ, அல்லது மூத்தவர்களாகவோ இருந்தாலும் சரியே.

இந்த ஹதீஸில் இருந்து நாம் ஒரு முக்கிய விடயத்தை விளங்கிக்கொள்கின்றோம். அதாவது, எங்களுக்கு கீழால் இருக்கும், உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர்களுடன் மிருதுவாக நடப்பது ஸுன்னா என்பதாகும். ஏனெனில் அவர்களும் எங்களைப் போன்ற மனிதர்களே. அவர்களை மதிப்பது, கண்ணியப்படுத்துவது மற்றும் அவர்களது உரிமைகளைக் கொடுப்பது என்பன அவர்களுக்கு நாம் செய்யவேண்டிய கடமைகளாகும்.

ஹதீஸ் எண் : 30

عَنْ أَبِي هُرَيْرَةَ، أَنَّ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، قَالَ: «إِذَا قَامَ أَحَدُكُمْ مِنْ مَجْلِسِهِ، ثُمَّ رَجَعَ إِلَيْهِ فَهُوَ أَحَقُّ بِهِ» (رواه مسلم)

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், **"உங்களில் ஒருவர் ஒரு சபையை விட்டும் எழுந்துசென்று, பின்பு அவ்விடத்திற்குத் திரும்பிவந்தால் அந்த இடத்திற்கு அவரே தகுதியானவர்."** (ஆதாரம் : முஸ்லிம்)

விளக்கம் : எமது மார்க்கம் முழுமையான மார்க்கம். எமது உலகிற்கோ மறுமைக்கோ பயன் தரும் எந்த சிறிய அல்லது பெரிய விடயமாக இருப்பினும் அது விட்டுவைக்கவில்லை.

நபி (ஸல்) அவர்கள் இந்த ஹதீஸில் தெளிவுபடுத்தியுள்ளதும் அவற்றில் ஒன்றே. இது சபையொழுக்கங்களில் ஒன்றாகும்.

இந்த ஒழுக்கமாவது, ஒரு மனிதன் ஒரு சபையில் இருந்துவிட்டு, பின்னர் அவ்விடத்தை விட்டு எழுந்து சென்று, பிறகு மீண்டும் வந்தால், அவரே அவ்விடத்திற்கு அதிகம் தகுதியானவர். எனவே, வேறு யாருக்கும் அவரிடமிருந்து அதை எடுக்கமுடியாது. அவர் எப்போதாவது திரும்பி வந்தால், அவர் எழுந்துசென்ற இடத்திற்கு அவரே மிகத் தகுதியானவர்.

இதனுள், பொது இடங்கள், பள்ளிவாசல்கள், வகுப்பறைகள், போன்ற இடங்களும் உள்ளடங்கும்.

எனவே ஒரு மனிதன், ஒரு சபையில் இருந்து எழுந்து சென்று சற்றுநேரத்திலேயே அவ்விடத்திற்கு மீண்டும் வந்தால் அவரே அவ்விடத்திற்கு மிகத் தகுதியானவர். எனினும், ஒரு சபையிலிருந்து எழுந்து சென்று நீண்ட நேரத்திற்குப் பின்னர் திரும்பிவந்தால் அவ்விடத்திற்கு அவர் தகுதியானவராக இருக்கமாட்டார். உதாரணமாக, ஒருவர் ழுஹருக்குக் பின்னர்

எழுந்து சென்று அஸ்ருக்குப் பின்னரோ, அல்லது ம.்.ரிபுக்குப் பின்னரோ, அல்லது மறுநாளோ வருகின்றார், இவர் அவ்விடத்திற்குத் தகுதியானவர் அல்ல.

பல சச்சரவுகள் குறிப்பாக வாலிபர்களுக்கு மத்தியில் சபைகளில் உட்கார்வது தொடர்பாகவே ஏற்படுகின்றது என்பது கவனிக்கத்தக்க ஒரு விடயமாகும்.

நாம் எமது சபைகளில் இந்த மார்க்க ஒழுக்கங்களைப் பேணியிருந்தால், எமக்கு மத்தியில் அன்பு அதிகரித்திருக்கும், கருத்துவேற்றுமைகள் குறைவடைந்திருக்கும்.

ஹதீஸ் எண் : 31

عَنْ أَبِي هُرَيْرَةَ، أَنَّ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: «حَقُّ الْمُسْلِمِ عَلَى الْمُسْلِمِ سِتٌّ، إِذَا لَقِيتَهُ فَسَلِّمْ عَلَيْهِ، وَإِذَا دَعَاكَ فَأَجِبْهُ، وَإِذَا اسْتَنْصَحَكَ فَانْصَحْ لَهُ، وَإِذَا عَطَسَ فَحَمِدَ اللهَ فَسَمِّتْهُ، وَإِذَا مَرِضَ فَعُدْهُ وَإِذَا مَاتَ فَاتَّبِعْهُ» (رواه مسلم)

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், **“ஒரு முஸ்லிம் பிற முஸ்லிமுக்கு செய்யவேண்டிய கடமைகள் ஆறு உள்ளன. நீ அவனை சந்தித்தால் ஸலாம் கூறு, அவன் உன்னை அழைத்தால் பதிலளி. அவன் உன்னிடம் உபதேசம் வேண்டினால் அவனுக்கு நீ உபதேசி, அவன் தும்மி பின்னர் அல்லாஹ்வைப் புகழ்ந்தால், அதற்கு நீ பதில் கூறு, அவன் நோய்வாய்ப்பட்டால் நீ நோய் விசாரி. அவன் மரணித்தால் அவனது ஜனாஸாவைப் பின் துயர்ந்து செல்.”** (ஆதாரம் : முஸ்லிம்)

விளக்கம் : ஒரு முஸ்லிம் பிற முஸ்லிமுக்கு செய்யவேண்டிய கடமைகள் நிறைய உள்ளன. இந்த ஹதீஸில் கூறப்பட்டுள்ள 6 அம்சங்களும் அவற்றுள் மிக முக்கியமானவையாகும்.

முதற் கடமை : ஸலாம் கூறுவது. உன் சகோதரனை நீ சந்தித்தால் அவனுக்கு நீ ஸலாம் கூறு. அவன் உனக்கு ஸலாம் கூறினால், அதற்கு நீ பதில் கூறு.

இரண்டாம் கடமை : அழைப்புக்கு பதில் அளித்தல். அவன் உன்னை அழைத்தால் அதற்கு நீ பதிலளி. குறிப்பாக, அவன் திருமண விருந்திற்காக உன்னை அழைத்தால் அதற்கு பதிலளிப்பது மிக முக்கிய கடமையாகும்.

மூன்றாம் கடமை : உபதேசித்தல். உன் சகோதரன் உன்னிடம் ஓர் உபதேசம் கேட்டால், அல்லது ஏதாவதொன்றைப் பற்றிக்

கேட்டால் அவர் கேட்பதைப் பற்றி உண்மையாகவும், நல்லெண்ணத்துடன் நலவை நாடிக் கூறு.

நான்காம் கடமை : அத்தஷ்மீத், அதாவது, உனது சகோதரன் தும்மி, பின்பு அல்லாஹ்வைப் புகழ்ந்தால், அதற்கு நீ பதிலளி. அதாவது, “யர்ஹமுகல்லாஹ்” (يرحمك الله) என்று கூறு. நீ “யர்ஹமுகல்லாஹ்” என்று கூறினால், அவர் “யஹ்தீகுமுல்லாஹு வயுஸ்லிஹு பாலகும்” (يهديكم الله ويصلح بالكم) என்று கூறட்டும்.

ஐந்தாம் கடமை : நோய் விசாரித்தல். உனது முஸ்லிமான சகோதரன் நோய்வாய்ப்பட்டால், நீ அவரை நோய் விசாரி. மேலும், அறிந்துகொள்! நீ அவரை நோய் விசாரிப்பதில் அவரது உள்ளத்திற்கு நல்ல தாக்கம் உண்டு. மேலும், அல்லாஹ்விடத்தில் உனக்கு நல்ல கூலியும் உண்டு.

ஆறாம் கடமை : அவனது ஜனாஸாவைப் பின்துயர்ந்து செல்லல். ஒரு முஸ்லிம் பிற முஸ்லிமுக்கு செய்யவேண்டிய கடமைகள் மரணத்திற்குப் பின்னரும் தொடரும். எனவே, அவன் மரணித்தால் அவனது ஜனாஸாவைப் பின்துயர்ந்து செல். அதாவது, அவரது ஜனாஸாவுக்காக தொழச் செல். பின்பு அவரை அடக்குவதற்காக கப்ரை நோக்கிச் செல். இதில் மகத்தான நலவுகள் உண்டு. அதிலே நோயாளிக்கு சிறந்த துஆவும், உயிரோடிருப்பவருக்கு பெரிய கூலியும் உண்டு.

ஹதீஸ் எண் : 32

عَنْ أَبِي سَعِيدٍ الخُدْرِيّ رَضِيَ اللَّهُ عَنْهُ: أَنَّ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: « أَعْطُوا الطَّرِيقَ حَقَّهُ» قَالُوا: وَمَا حَقُّ الطَّرِيقِ يَا رَسُولَ اللَّهِ؟ قَالَ: «غَضُّ البَصَرِ، وَكَفُّ الأَذَى، وَرَدُّ السَّلاَمِ، وَالأَمْرُ بِالْمَعْرُوفِ، وَالنَّهْيُ عَنِ المُنْكَرِ» (متفق عليه)

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ ஸஈத் அல்குத்ரீ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். **“பாதைக்கு அதன் கடமையை நிறைவேற்றுங்கள்.”** அப்போது நபித்தோழர்கள், **“அதன் கடமை என்ன?”** எனக் கேட்க, **“பார்வையைத் தாழ்த்துதல், நோவினையைத் தடுத்தல், ஸலாத்திற்கு பதில் சொல்லல், நன்மையை ஏவுதல், தீமையைத் தடுத்தல்”** என்றார்கள். (ஆதாரம் : புகாரி, முஸ்லிம்)

விளக்கம் : நபி (ஸல்) அவர்களது காலத்தில் மக்கள் பாதையோரங்களில் கூடியமர்ந்து, கதைத்துக் கொண்டிருப்பார்கள்.

நபி (ஸல்) அவர்கள், அவர்களைப் பார்த்து பாதையில் உட்கார வேண்டாம் என்றார்கள். அப்போது, அவர்கள், நாம் கட்டாயமாக உட்காரவேண்டியுள்ளது என்றார்கள், அதற்கு நபியவர்கள், அப்படியாயின், பாதையின் கடமைகளை நிறைவேற்றுங்கள் என்றார்கள். அதற்கு நபித்தோழர்கள் அது என்ன? என்று கேட்டபோது, நபி (ஸல்) பாதையின் இந்த நான்கு கடமைகளையும் கூறினார்கள்.

முதலாவது : பார்வையைத் தாழ்த்துதல். யாராவது பாதையில் அமர்ந்திருக்கும் போது, திறக்கப்பட்டிருக்கும் வீட்டைக் கண்டால் அதைப் பார்க்கமாட்டார். அதுபோன்று தான், பாதையில் ஒரு பெண்ணைக் கண்டாலும் தன் பார்வையைத் தாழ்த்திக் கொள்வார். அல்லாஹ் கூறுகின்றான், **“(நபியே!)**

முஃமின்களுக்கு அவர்களது பார்வையைத் தாழ்த்திக் கொள்ளுமாறு கூறுங்கள்” (ஸூரா அந்நூர் : 30)

இரண்டாவது : நோவினையைத் தடுத்தல். அதாவது, பாதையை நெருக்கடிக்குள்ளாக்கவோ, பாதையில் மக்களுக்கு தொந்தரவை ஏற்படுத்தும் குப்பை போன்றவைகளை வீசவோ மாட்டார்.

மூன்றாவது : ஸலாத்திற்கு பதில் சொல்லல். யாராவது ஸலாம் சொன்னால் உட்கார்ந்திருப்பவர்கள் அதற்கு பதில் சொல்வது கடமையாகும். ஸலாம் கூறுவது ஸுன்னாவாகும். எனினும் அதற்கு பதில் கூறுவது கடமையாகும். அல்லாஹ் கூறுகின்றான், **“உங்கள் மீது முகமன் கூறப்பட்டால், அதை விட அழகான முகமனைக் கூறுங்கள், அல்லது அதையே திரும்பக் கூறுங்கள்.”** (ஸூரா அந்நிஸா : 86)

நான்காவது : நன்மையை ஏவதல், தீமையைத் தடுத்தல். அல்லாஹ் முஃமின்களை, அவர்கள் நன்மையை ஏவித், தீமையைத் தடுப்பார்கள் எனப் புகழ்ந்து கூறியுள்ளான். அல்லாஹ் கூறுகின்றான், **“முஃமினான ஆண்களும் பெண்களும் அவர்களில் சிலர் சிலரது தோழர்கள். நன்மையை ஏவுவார்கள், தீமையைத் தடுப்பார்கள், தொழுகையை நிலைநாட்டுவார்கள், ஸகாத்தையும் கொடுப்பார்கள், மேலும், அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கட்டுப்படுவார்கள். அவர்களுக்கு அல்லாஹ் அருள் செய்வான். நிச்சயமாக அல்லாஹ் உறுதியானவன், தீர்க்கமானவன்.”** (ஸூரா அத்தவ்பா : 71)

ஹதீஸ் எண் : 33

عَنْ عَبْدِ اللَّهِ بْنِ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُمَا: أَنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: «مَا حَقُّ امْرِئٍ مُسْلِمٍ لَهُ شَيْءٌ يُوصِي فِيهِ، يَبِيتُ لَيْلَتَيْنِ إِلَّا وَوَصِيَّتُهُ مَكْتُوبَةٌ عِنْدَهُ» (متفق عليه)

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், **“வஸிய்யத் (மரண சாசனம்) எழுதப்பட வேண்டிய ஒரு பொருள் ஒரு முஸ்லிமிடம் இருந்தால், அந்த வஸிய்யத் எழுதப்படாமல் இரண்டு இரவுகள் கழிப்பதற்கு அவனுக்கு அனுமதி கிடையாது”** (ஆதாரம் : புகாரி, முஸ்லிம்)

விளக்கம் : வஸிய்யத் செய்யப்படவேண்டிய ஒரு பொருள் இருப்பவர், வஸிய்யத் செய்வது அவசியம் என்பதை இந்த ஹதீஸ் அறிவிக்கின்றது.

ஒரு மனிதன் கடன் கொடுக்கவேண்டியிருந்தால், அல்லது அல்லது கொடுக்காத ஸகாத் இருந்தால், அல்லது அமானிதமோ, அடகுப் பொருட்களோ அல்லது ஏனைய உரிமைகளோ இருந்தால் இவருக்கு வஸிய்யத் கடமையாகும்.

அவரிடத்தில் ஏனையோரின் உரிமைகள் இல்லாவிடின் அப்போது அவர் மீது வஸிய்யத் வாஜிபாக மாட்டாது. எனினும் அவருக்கு அது விரும்பத்தக்க ஒரு செயலாக இருக்கும். தனது பணத்தில் மூன்றில் ஒன்றையோ. அதைவிடக் குறைவாகவோ, நலன்புரித் திட்டங்களிலோ. நன்மை பயக்கும் வழிகளிலோ செலவழிப்பதற்கு வஸிய்யத் செய்வார்.

இங்கு கவனிக்கப்பட வேண்டிய ஒரு முக்கிய அம்சம் என்னவெனில், வஸிய்யத் என்பது சிறிய விடயங்களிலும் வரும். உதாரணமாக, ஒரு சிறுதொகை கடன் எடுத்தவர், ஒரு

பொருளை வாங்கி அதன் பணத்தை பின்னர் வழங்க நினைப்பவர். இது போன்ற மக்களது நாளாந்த வாழ்வில் அடிக்கடி நிகழும் விடயங்களிலும் வஸிய்யத் வரும்.

கவனிக்கப்பட்டவேண்டிய இன்னுமொரு அம்சம் என்னவெனில், வஸிய்யத்திற்கு என குறிப்பிட்ட வசன முறை கிடையாது. வஸிய்யத் செய்பவரின் கடமை என்னவெனில், தான் வஸிய்யத் செய்ய விரும்பும் அம்சத்தை விளங்கமுடியுமான தெளிவான அமைப்பில் எழுதுவதாகும். அது தாளிலோ, மின்னஞ்சலிலோ, தொலைபேசி குறுந்தகவல்களிலோ இருக்கலாம். அல்லது எழுதாமல் வாயால் பேசி வஸிய்யத் செய்யவும் முடியும். இவையனைத்துமே நல்ல முறைகளே. இன் ஷா அல்லாஹ் இந்த வழிமுறைகள் போதுமாகும்.

ஹதீஸ் எண் : 34

عَنِ ابْنِ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُمَا أن رَسُولُ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قال: «أَلاَ، إِنَّ اللَّهَ يَنْهَاكُمْ أَنْ تَحْلِفُوا بِآبَائِكُمْ، فَمَنْ كَانَ حَالِفًا فَلْيَحْلِفْ بِاللَّهِ، وَإِلَّا فَلْيَصْمُتْ» (متفق عليه)

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், **“நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் உங்கள் பெற்றோரைக் கொண்டு சத்தியம் செய்வதைத் தடுக்கின்றான். யாராவது சத்தியம் செய்பவராக இருந்தால் அல்லாஹ்வைக் கொண்டு சத்தியம் செய்யட்டும். அவ்வாறில்லாவிட்டால் வாய்மூடி இருக்கட்டும்.”** (ஆதாரம் : புகாரி, முஸ்லிம்)

விளக்கம் : இஸ்லாத்தின் ஆரம்ப காலங்களில் நபித் தோழர்கள் அவர்களது ஜாஹிலிய்யாக் கால வழமை போன்று, அல்லாஹ் அல்லாதவர்களைக் கொண்டு சத்தியம் செய்பவர்களாக இருந்தார்கள். எனவே, அவர்களது தந்தையர்கள், தாய்மார். கண்ணியம், அமானிதம் போன்ற பலவற்றைக் கொண்டு சத்தியம் செய்வார்கள்.

நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ் அல்லாததைக் கொண்டு சத்தியம் செய்வதை விட்டும் தடுத்தார்கள். இத்தடையை செவிமடுத்து, அதனை உடனடியாக ஏற்று நடந்தவர்களில் உமர் (ரலி) அவர்களும் ஒருவராவார். அதற்குப் பின்னர் அவர் தனது நாவால் அல்லாஹ் அல்லாதவரைக் கொண்டு சத்தியம் செய்யவே இல்லை.

இந்த ஹதீஸை அறிவித்த பின்னர் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள், “உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள், **“நபி (ஸல்) அவர்கள் அதைத் தடை செய்த பின்னர் நான் அவ்வாறு சத்தியம் செய்யவே இல்லை.”**

இதுதான் ஒரு முஸ்லிமின் கடமையாகும். அல்லாஹ்வுடைய கட்டளைகளை மனவுறுதியுடன், தடுமாற்றமோ, பிற்படுத்தலோ, பலவீனமோ இல்லாமல் எடுத்து நடக்கவேண்டும்.

இன்று சிலமக்கள், “உனது வாழ்நாள் மீது சத்தியமாக”, “நபியின் மீது சத்தியமாக” , “க.ஃ.பாவின் மீது சத்தியமாக” என்று கூறுவதும் அல்லாஹ் அல்லாதவற்றைக் கொண்டு சத்தியம் செய்வதனுள் நுழையும் வார்த்தைகளாகும்.

இவை அனைத்துமே தடுக்கப்பட்ட சத்தியங்களாகும். இது அல்லாஹ்வுக்கு இணைவைப்பதுமாகும்.

அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள், ஒரு மனிதர் “க.ஃ.பாவின் மீது சத்தியமாக! அவ்வாறல்ல” எனக் கூறுவதைக் கேட்டபோது, அவரை நோக்கி, “அல்லாஹ் அல்லாதவற்றைக் கொண்டு சத்தியம் செய்யாதீர்கள், நபி (ஸல்) அவர்கள், **“யார் அல்லாஹ் அல்லாதவற்றைக் கொண்டு சத்தியம் செய்கின்றாரோ, அவர் இணைவைத்துவிட்டார். அல்லது நிராகரித்துவிட்டார்”** எனக் கூற நான் கேட்டுள்ளேன்.” என்றார்கள். (ஆதாரம் : அஹ்மத், அபூதாவூத், திர்மிதி)

ஹதீஸ் எண் : 35

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللَّهُ عَنْهُ، قَالَ: «مَا عَابَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ طَعَامًا قَطُّ، إِنِ اشْتَهَاهُ أَكَلَهُ وَإِلَّا تَرَكَهُ» (متفق عليه)

அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள், "**நபி (ஸல்) அவர்கள் எந்த உணவையும் குறை கூறியதில்லை. அவர்கள் விரும்பினால் சாப்பிடுவார்கள். இல்லாவிட்டால் விட்டுவிடுவார்கள்.** (ஆதாரம் : புகாரி, முஸ்லிம்)

விளக்கம் : நபி (ஸல்) அவர்கள் நற்குணமுடையவர்களாக இருந்தார்கள். நல்ல, அழகான வார்த்தைகளை விரும்புவதும், கெட்ட வெறுப்பான வார்த்தைகளை வெறுப்பதும் அவர்களது" ஒரு நற்குணமாக இருந்தது.

இந்த ஹதீஸில் நபி (ஸல்) அவர்களின் ஓர் ஒழுக்கம் கூறப்பட்டுள்ளது. அதாவது, அவருக்கு ஏதாவது உணவு கொடுக்கப்பட்டால் அதற்கு ஒருபோதும் குறைகூறமாட்டார்கள். இது குளிர்மையான உணவு என்றோ, தரம் குறைந்த உணவென்றோ, வேகாத உணவென்றோ, நல்லதல்ல என்றோ, உப்பு குறைவானதென்றோ, அல்லது வேறு ஏதும் குறைகளையோ கூறமாட்டார்கள். மாறாக நபியவர்களின் வழமை என்னவெனில், அவர் விரும்பினால் சாப்பிடுவார்கள். விரும்பாவிட்டால் அதை எடுக்காமல் விட்டுவிடுவார்கள்.

எனவே, நாம் நபியவர்களைப் பின்பற்றுவது கட்டாயமாகும். ஒருபோதும் எந்த உணவையும் குறைகூறக் கூடாது. மாறாக, அல்லாஹ்வின் அருள்களுக்காக அவனைப் புகழ்ந்து நன்றி செலுத்துவோம். அழகான வார்த்தைகளையே கூறுவோம். நல்ல பேச்சுக்களையே பேசுவோம்.

ஹதீஸ் எண் : 36

عن البَرَاءَ بن عازب رضي الله عنه قال : كَانَ رَسُولُ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: «أَحْسَنَ النَّاسِ وَجْهًا وَأَحْسَنَهُ خَلْقًا، لَيْسَ بِالطَّوِيلِ البَائِنِ، وَلاَ بِالقَصِيرِ» (متفق عليه)

அல்பரா பின் ஆஸிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள், **"நபி (ஸல்) அவர்கள் அழகான முகம் உடையவராகவும், அழகான குணமுடையவராகவும் இருந்தார்கள். கூடுதலான உயரமுடையவராகவோ, கட்டையானவராகவோ இருக்கவில்லை."** (ஆதாரம் : புகாரி, முஸ்லிம்)

விளக்கம் : நபி (ஸல்) அவர்கள் நற்குணமுடையவராக இருந்தார்கள். அதைப்பற்றித்தான் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான், **"(நபியே!) நிச்சயமாக நீங்கள் மகத்தான நற்குணத்தின் மீது இருக்கின்றீர்கள்"** (ஸூரா அல் கலம் : 4)

நற்குணத்துடன் அழகான தோற்றம், படைகோலம் கொண்டவராகவும் இருந்தார்கள். அதைப் பற்றித்தான் அல்பரா இப்னு ஆஸிப் என்ற நபித்தோழர் இவ்வாறு கூறுகின்றார், "நபி (ஸல்) அவர்கள் அழகான முகம் உடையவராகவும், அழகான குணமுடையவராகவும் இருந்தார்கள்."

நபியவர்கள் நடுத்தர உயரமுடையவராக இருந்தார்கள். அளவை மிஞ்சிய உயரமுடையவராகவோ, கட்டையானவராகவோ இருக்கவில்லை.

இன்னொரு அறிவிப்பில், அல்பரா இப்னு ஆஸிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள், **"நபி (ஸல்) அவர்கள் நடுத்தர உயரமுடையவராகவும், தோள்புயங்கள் அகன்றவராகவும் இருந்தார்கள். காதுமடல் வரை அவரது முடி இருந்தது. அவரை**

நான் ஒரு சிவப்பு ஆடையில் கண்டேன். அவரை விட அழகான ஒருவரை நான் கண்டதே இல்லை.”

புகாரி மற்றும் முஸ்லிமின் ஒரு அறிவிப்பில் அனஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள், **“நபி (ஸல்) அவர்கள் சிவப்பு நிறம் கலந்த, வெள்ளை நிறம் உடையவராக இருந்தார்கள்.”**

அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள், **“நபி (ஸல்) அவர்கள் வெள்ளியால் வார்த்தெடுக்கப்பட்டதைப் போன்று, வெள்ளை நிறமுடையவராக இருந்தார்கள்.”**

ஜாபிர் பின் ஸமுரா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள், **“நபி (ஸல்) அவர்களை ஒரு பிரகாசமான சந்திரன் உள்ள ஒரு இரவில் கண்டேன். அவர்களையும், சந்திரனையும் மாறிமாறிப் பார்த்தேன். நிச்சயமாக அவர்கள் என்னிடத்தில் சந்திரனை விட அழகானவர்கள்.”**

அல்லாஹ் அவர் மீதும், அவரது குடும்பத்தவர்கள், தோழர்கள் மீதும் ஸலவாத்தும் ஸலாமும் கூறுவானாக.

ஹதீஸ் எண் : 37

عن عَمْرُو بْنُ العَاصِ رَضِيَ اللَّهُ عَنْهُ قال : سألت النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ" أَيُّ النَّاسِ أَحَبُّ إِلَيْكَ؟ قَالَ: «عَائِشَةُ»، فَقُلْتُ: مِنَ الرِّجَالِ؟ فَقَالَ: «أَبُوهَا»، قُلْتُ: ثُمَّ مَنْ؟ قَالَ: «ثُمَّ عُمَرُ بْنُ الخَطَّابِ» (متفق عليه)

அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், நபி (ஸல்) அவர்களிடம், மனிதர்களில் உங்களுக்கு மிக விருப்பமானவர் யார்? எனக் கேட்டேன். அதற்கவர்கள், **"ஆயிஷா"** என்றார்கள், ஆண்களில் யார்? எனக் கேட்டேன். அதற்கவர்கள், **"அவரது தந்தை"** என்றார்கள். பின்பு யார்? எனக் கேட்டேன். அதற்கவர்கள், **"பின்பு உமர் பின் கத்தாப்"** என்றார்கள். (ஆதாரம் : புகாரி, முஸ்லிம்)

விளக்கம் : அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் நபித்தோழர்களில் மூத்த, பிரபல்யமான ஒருவர்.

இந்த ஹதீஸில் அவர் நபியவர்களிடம் அவர்களுக்கு மிக விருப்பமானவர் யார்? என வினவியதாகக் கூறுகின்றார்கள். அதற்கு நபியவர்கள், அவர்களது மனைவி ஆயிஷா என்று கூறுகின்றார்கள்.

அப்போது அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள், ஆண்களில் யார்? எனக் கேட்க, அவரது தந்தை, அதாவது ஆயிஷாவின் தந்தை அபூ பக்ர் (ரலி) என்கிறார்கள்.

பின்பு அம்ர் (ரலி) அவர்கள், பின்பு யார்? எனக் கேட்க, நபி (ஸல்) அவர்கள் "உமர் இப்னுல் கத்தாப் (ரலி)" என்கிறார்கள்.

நபி (ஸல்) அவர்களுக்கு மிக விருப்பமானவர்கள் என்ற சிறப்பம்சம் இந்த மூன்று நபித்தோழர்களுக்கும் உள்ளது.

இங்கு அறிந்துகொள்ளப்படவேண்டிய ஒரு முக்கியம் அம்சம் உள்ளது. அதாவது, அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத்தினர் நான்கு கலீபாக்களும் நபித்தோழர்களில் மிகச் சிறந்தவர்கள் என்று கூறுவர். அவர்களிக்கிடையில் சிறப்பின் ஒழுங்குமுறை அவர்களது கிலாபத்தின் ஒழுங்குமுறை போன்றது. அவர்களில் சிறந்தவர் அபூ பக்ர் அஸ்ஸித்தீக், பின்பு உமர் இப்னுல் கத்தாப், பின்பு உஸ்மான் பின் அப்பான், பின்பு அலி இப்னு அபீ தாலிப் (ரலி).

இவர்கள் தாம் நபியவர்களின் சமுதாயத்திலேயே மிகச் சிறந்தவர்கள். அவர்களுக்கும், ஏனைய நபித்தோழர்களுக்கும் நாம் செய்யவேண்டிய கடமை என்னவெனில், அவர்களை நேசிப்பதும், கண்ணியப்படுத்துவதும், அவர்களது பெயர் கூறும் போது "ரழியல்லாஹு அன்ஹு" கூறுவதுமாகும். அல்லாஹ் அவர்கள் அனைவரையும் பொருந்திக்கொள்வானாக, அவர்களையும் பொருந்திக்கொள்ளச் செய்வானாக.

ஹதீஸ் எண் : 38

عن أنس بن مالك رضي الله عنه قَالَ: كَانَ أَكْثَرُ دَعْوَةٍ يَدْعُو بِهَا يَقُولُ: «اللَّهُمَّ آتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً وَفِي الْآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ» (متفق عليه)

அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள், **"நபி (ஸல்) அவர்கள் அதிகம் கேட்கும் துஆவாக இருந்தது, "அல்லாஹும்ம ஆதினா பித்துன்யா ஹஸனதன், வபில் ஆகிரதி ஹஸனதன் வகினா அதாபந் நார்" என்ற துஆவாகும்.**"(ஆதாரம் : புகாரி, முஸ்லிம்)

(யா அல்லாஹ்! இவ்வுலகில் எமக்கு நல்லதைத் தருவாயாக! மறுமையிலும் நல்லதைத் தருவாயாக! மேலும், நரகவேதனையை விட்டும் எம்மைக் காப்பாயாக!)

விளக்கம் : துஆ நற்கருமங்களில் மிக முக்கிய ஒன்றாகும். அது அல்லாஹ்வை மகத்துவப்படுத்துவதற்கும், ஒருமைப் படுத்துவதற்கும் ஓர் ஆதாரமாகும். அல்லாஹ்வின் அருளிற்கும், மன்னிப்பிற்கும், பொருத்தத்திற்கும் காரணமாகும். மேலும், அல்லாஹ்வின் அன்புக்கும். அவன் எமது தேவைகளை ஏற்றுக்கொள்ளவும், அவன் எமக்கு கொடையளிக்கவும் அது காரணமாகும்.

நபி (ஸல்) அவர்கள் அதிகம் துஆக் கேட்பார்கள். அவர்களது துஆக்கள் ஹதீஸ் நூற்களில் கூறப்பட்டுள்ளன. குறிப்பாக, ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹு முஸ்லிம், ஸுனனு அபீ தாவூத், ஸுனனுத் திர்மிதீ, ஸுனனுந் நஸாஈ, ஸுனனு இப்னு மாஜஹ் என்ற ஆறு கிரந்தங்களும் அவற்றுள் உள்ளனவாகும்.

நபியவர்கள் துஆக்கள் அதிகமாக இருந்தாலும்,

اللهم آتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً وَفِي الْآخِرَةِ حَسَنَةً وَقِنَا عَذَابَ النَّارِ

என்ற இந்த துஆவை நபியவர்கள் அதிகம் ஓதுவார்கள். ஏனெனில் அது அல்குர்ஆனில் வந்துள்ள முக்கிய ஒரு துஆவாகும். உலக மற்றும் மறுமை நலவுகளை அது உள்ளடக்கியுள்ளது.

அப்துர்ரஹ்மான் அஸ்ஸி.ஃ.தி (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள், "உலகில் கேட்கப்படும் நலவில், ஹலாலான, சந்தோசமான மற்றும் விசாலமான ரிஸ்க், நல்ல மனைவி, கண்குளிர்ச்சியான பிள்ளை, நிம்மதி, சந்தோசம், பயனுள்ள அறிவு, நல்லமல், போன்ற விருப்பமான எதிர்பார்ப்புகளில், மனிதனுக்கு கிடைப்பது பொருத்தமான அனைத்தும் உள்ளடங்கும்.

மறுமையின் நலவு என்பது கப்ரிலும், மஹ்சரிலும், நரகிலும் வேதனையை விட்டும் பாதுகாக்கப்படுவதும், அல்லாஹ்வின் பொருத்தம் கிடைப்பதும், நிரந்தர இன்பத்தை அடைவதும், அல்லாஹ்வை நெருங்குவதுமாகும்.

எனவே இந்த துஆ அனைத்தையும் உள்ளடக்கிய மேலும் முன்னுரிமை வழங்கப்படவேண்டிய துஆவாக இருக்கின்றது. இதனாலேயே நபி (ஸல்) அவர்கள் இந்த துஆவை அதிகம் ஓதி, அதனைத் தூண்டியுமுள்ளார்கள்.

ஹதீஸ் எண் : 39

عَنْ أَبِي هُرَيْرَةَ، أَنَّ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، قَالَ: " إِذَا مَاتَ الْإِنْسَانُ انْقَطَعَ عَنْهُ عَمَلُهُ إِلَّا مِنْ ثَلَاثَةٍ: إِلَّا مِنْ صَدَقَةٍ جَارِيَةٍ، أَوْ عِلْمٍ يُنْتَفَعُ بِهِ، أَوْ وَلَدٍ صَالِحٍ يَدْعُو لَهُ " (رواه مسلم)

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள், **“ஒரு மனிதன் மரணித்துவிட்டால் அவனது அமல்களில் மூன்றைத் தவிர ஏனையவை நின்றுவிடும். (அவை) நிரந்தர தர்மம், பயன்தரும் அறிவு, அவனுக்காக பிரார்த்திக்கும் நல்லபிள்ளை என்பனவாகும்.”** (ஆதாரம் முஸ்லிம்)

விளக்கம் : அல்லாஹ் தஆலா தன் மு.்.மினான அடியார்களுக்கு தனது அருளின் பக்கம் நெருக்கமாக்கி வைக்கும் மேலும், கோபத்தையும் தண்டனையையும் விட்டும் தூரமாக்கி வைக்கும் நற்கருமங்களை செய்யுமாறு ஏவியுள்ளான்.

இந்த ஹதீஸில் நபி (ஸல்) அவர்கள் ஒரு மனிதன் மரணித்துவிட்டால் மூன்று விடயங்களைத் தவிர அனைத்து அமல்களும் நின்றுவிடும் என்கின்றார்கள். அம்மூன்று விடயங்களின் காரணமாக மரணத்திற்குப் பின்னரும் அவருக்கு நன்மைகள் வந்துகொண்டிருக்கும்.

முதலாவது விடயம் : அவரது வாழ்நாளில் நிரந்தர தர்மம் ஒன்றைச் செய்தல். உதாரணமாக, அவரது வாழ்நாளில் ஒரு கிணறைக் கட்டுவது. அக்கிணற்றின் நன்மை மரணத்திற்குப் பின்னரும் அவரை அடையும். அக்கிணற்றிலிருந்து யாராவது பயன்பெற்றால், அதைக் கட்டியவருக்கு அவர் கப்ரிலிருக்கும் போதும் நன்மை கிடைத்துக்கொண்டிருக்கும்.

பள்ளிவாசல், வைத்தியசாலைகள், பாடசாலைகள் கட்டுதல், அல்குர்ஆன் பிரதிகளை விநியோகித்தல் போன்ற நிரந்தர தர்மங்களும் இதற்கு உதாரணமாகும்.

இரண்டாவது விடயம் : பயன் தரும் அறிவு. யாராவது ஒருவர் ஒரு கூட்டத்தற்குக் கற்றுக்கொடுத்தால், அல்லது உபதேசித்து வழிகாட்டினால், அல்லது ஒரு நூலைத் தொகுத்தால், அல்லது பயனுள்ள கல்வியை பரப்புவதிலோ, விநியோகிப்பதிலோ, அச்சிடுவதிலோ பங்குகொண்டால் அதற்கான கூலி அவருக்கு அவரது வாழ்விலும், மரணத்திற்குப் பின்னரும் கிடைக்கும்.

மூன்றாம் விடயம் : நல்ல பிள்ளை (ஆண்கள், பெண்கள் இருவரையும் உள்ளடக்கும்.) ஒரு பெண்ணோ அல்லது ஆணோ தன் பிள்ளைகளை நல்ல முறையில் வளர்த்தால், அவர்களது அனைத்து நல்லமல்களும் அவர்களை வளர்த்தவர்களின் நன்மைத் தராசில் இருக்கும். அதேபோன்று நல்ல பிள்ளை தனது தாய்க்கும் தந்தைக்கும் துஆ கேட்கும். அதன் மூலம் அவ்விருவரது கூலியும் நன்மையும் சிறப்பும் அல்லாஹ்விடம் அதிகரித்துக்கொண்டே இருக்கும்.

ஹதீஸ் எண் : ௪0

عَنْ جَابِرٍ بن عبد الله قَالَ: سَمِعْتُ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، يَقُولُ: «يُبْعَثُ كُلُّ عَبْدٍ عَلَى مَا مَاتَ عَلَيْهِ» (رواه مسلم)

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். **"ஒவ்வொரு அடியானும் எதன் மீது மரணிக்கின்றானோ அதன் மீதே எழுப்பப்படுவான்."** (ஆதாரம் : முஸ்லிம்)

விளக்கம் : இந்த ஹதீஸ் நல்ல இறுதிமுடிவைப் பற்றிப் பேசுகின்றது. நபித்தோழர்கள் தொடக்கம் எமது காலம் வரையுள்ள நல்லமக்கள் கவனம் செலுத்தும் மிக முக்கிய ஒரு விடயமாக அது உள்ளது.

நல்ல இறுதி முடிவு என்பது ஒரு மனிதனின் வாழ்நாள் அவன் ஈமானிலும், நலவிலும், நல்லமல்களிலும் இருக்கும் நிலையில் முடிவடைவதாகும்.

இந்த ஹதீஸில் நபி (ஸல்) அவர்கள், ஒரு மனிதன் ஒரு நிலையில் மரணித்தால் அந்த நிலையிலேயே எழுப்பப்படுவார் என்கிறார்கள். எனவே, யார் ஹஜ்ஜில் அல்லது உம்ராவில் தல்பியா (ஹஜ், உம்ரா வணக்கங்களில் கூறப்படும் ஒரு திக்ர்) கூறிய நிலையில் மரணித்தால், அவர் மறுமையில் தல்பியா கூறிய நிலையிலேயே எழுப்பப்படுவார். யார் அல்லாஹ்வை திக்ர் செய்த நிலையில் மரணிக்கின்றாரோ, அவர் அல்லாஹ்வை திக்ர் செய்த நிலையிலேயே எழுப்பப்படுவார். யார் ஒரு பாவத்தை செய்யும் நிலையில் மரணிக்கின்றாரோ, மறுமையில் அப்பாவத்துடனே எழுப்பப்படுவார். அல்லாஹ்விடம் ஈடேற்றத்தையும் பாதுகாப்பையும் கேட்போம்.

இதனால், எமக்கு நல்லமுடிவு ஏற்படவும், மறுமையில் நாம் அல்லாஹ்வின் அருளிலும், பாவமன்னிப்பிலும், அவனது பொறுத்தத்திலும் எழுப்பப்படவும், கெட்ட செயல்களை நாம் தவிர்ந்துகொள்வதுடன், எமது நேரங்களை நல்லமல்களால் நிரப்பிக் கொள்வது அவசியமாகும்.

முடிவுரை

அல்லாஹ்வைப் புகழ்கின்றேன். அவனுக்கு நன்றி செலுத்துகின்றேன். அனைத்து நலவுகளையும் கொண்டு அவனை மகத்துவப்படுத்துகின்றேன். அவனிடத்தில் பாவமன்னிப்புக் கேட்கின்றேன். அவனிடத்தில் எனக்காகவும், எனது இந்த வார்த்தைகளை வாசிப்பவர்களுக்கும் மன்னிப்பையும் பாதுகாப்பையும், அன்பையும், பொருத்தத்தையும் கேட்கின்றேன்.

இந்நூலின் இறுதியில், இந்த குறிப்புகளைப் பதிந்துகொள்ள விரும்புகின்றேன்.

1. இந்த நூல் சிறுவர், பெரியோர் அனைவருக்கும் பொருத்தமானது. இதில் அல்குர்ஆன் வசனம், அல்லது ஹதீஸ், அல்லது அறிஞர்களின் நூல்களில் இருந்து கருத்தாக அல்லது அதே வார்த்தைக்கு வார்த்தையாகப் பெறப்பட்ட வழிகாட்டல்கள் மாத்திரம் தான் இருக்கும்.
2. இந்த சிறிய ஹதீஸ்களை நான் தேர்ந்தெடுத்தது மனனமிடுவது இலகுவாக இருப்பதற்காகும். அதிக பயன்களைப் பெற்றுக் கொள்வதற்காகவேண்டி தலைப்புக்களை பல்வகைப்படுத்தியுள்ளேன்.
3. மனனமிடுவதற்கும், மீட்டிக் கொள்வதற்கும் இலகுவாக இருப்பதற்காக, நூலின் இறுதியில் ஹதீஸ்களை முழுமையாகத் தொகுத்துள்ளேன்.
4. சிறுவர்களுக்கான இந்த 40 நாற்பது ஹதீஸ்களையும் சிறுவர்கள் மனனமிடுவதற்காகவேண்டியே நான் தொகுத்துள்ளேன். எனவே, இவற்றை மனனமிடுவதற்காக போட்டிகளையும், நிகழ்ச்சிகளையும் வீடுகளிலும், பாடசாலைகளிலும், ஏனைய சங்கங்களிலும் நடத்துமாறு நான் உபதேசிக்கின்றேன்.

5. தாய்மார், தந்தையோர், ஆசிரியர்கள், ஆசிரியைகளை தங்கள் ஆண், பெண் பிள்ளைகளுக்கு வாசித்துக் காட்டுமாறு நான் வலியுறுத்துகின்றேன். ஹதீஸ்களை மனனமிட முன் நாவை செம்மைப் படுத்தவும், இந்த ஹதீஸ்கள் உள்ளடக்கியுள்ள அர்த்தங்களையும், பயன்களையும், வழிகாட்டல்களையும் அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கவும் அது வழிவகுக்கும்.
6. ஹதீஸ்களை விளக்கும் போது பல அர்த்தங்களையும், பயன்களையும், வழிகாட்டல்களையும் நான் கூறியிருந்தாலும், நான் கூறாத அர்த்தங்களும், பயன்களும், வழிகாட்டல்களும் நிறையவே உள்ளன. எனவே, பிள்ளைகள் தாங்களாகவோ. அல்லது வேறுயாருடனாவது இணைந்தோ மேலும் அர்த்தங்களையும் பயன்களையும் சிந்தித்து அடைந்துகொள்வதையும், அவர்கள் பயனடைந்து ஏனையோருக்கும் கற்றுக்கொடுப்பதற்காக அவற்றை எழுதிவைத்துக்கொள்வதையும் நான் விரும்புகின்றேன்.

அல்லாஹ்வே உதவியாளன்.

وصلى الله وسلم وبارك على نبينا محمد.

விளக்கப்பட்டுள்ள 40 நபிமொழிகளும் ஒரே பார்வையில்

1. عَنْ أبي عبد الرحمن عَبْدِ اللَّهِ بْنِ عُمَرَ بْنِ الْخَطَّابِ رَضِيَ اللَّهُ عَنْهُمَا قَالَ: سَمِعْتُ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُولُ: «بُنِيَ الْإِسْلَامُ عَلَى خَمْسٍ: شَهَادَةِ أَنْ لَا إِلَهَ إِلَّا اللَّهُ، وَأَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ، وَإِقَامِ الصَّلَاةِ، وَإِيتَاءِ الزَّكَاةِ، وَحَجِّ الْبَيْتِ، وَصَوْمِ رَمَضَانَ»، (متفق عليه)
2. عَنْ أَنَسٍ رَضِيَ اللَّهُ عَنْهُ، قَالَ: سُئِلَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ عَنِ الكَبَائِرِ، قَالَ: «الإِشْرَاكُ بِاللَّهِ، وَعُقُوقُ الوَالِدَيْنِ، وَقَتْلُ النَّفْسِ، وَشَهَادَةُ الزُّورِ» (متفق عليه)
3. عَنْ عَبْدِ اللَّهِ بْنِ عَمْرٍو رَضِيَ اللَّهُ عَنْهُمَا، عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: «المُسْلِمُ مَنْ سَلِمَ المُسْلِمُونَ مِنْ لِسَانِهِ وَيَدِهِ (متفق عليه)
4. عَنْ أَبِي هُرَيْرَةَ، عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: " آيَةُ المُنَافِقِ ثَلاَثٌ: إِذَا حَدَّثَ كَذَبَ، وَإِذَا وَعَدَ أَخْلَفَ، وَإِذَا اؤْتُمِنَ خَانَ" (متفق عليه)
5. عن جابِرٍ رَضِي اللهُ عنه قال : سَمِعْتُ النبيَّ صلى الله عليه وسلم يقول : إِنَّ بَيْنَ الرَّجُلِ وَبَيْنَ الشِّرْكِ وَالْكُفْرِ تَرْكَ الصَّلَاةِ (رواه مسلم)
6. عن عَبْدِ اللَّهِ بن مسعود رضي الله عنه قَالَ: سَأَلْتُ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: أَيُّ العَمَلِ أَحَبُّ إِلَى اللَّهِ؟ قَالَ: "الصَّلاَةُ عَلَى وَقْتِهَا» قَالَ: ثُمَّ أَيٌّ؟ قَالَ: «بِرُّ الوَالِدَيْنِ" (متفق عليه)

7. عَنْ عُثْمَانَ بْنِ عَفَّانَ، قَالَ: سَمِعْتُ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُولُ: «مَنْ تَوَضَّأَ لِلصَّلَاةِ فَأَسْبَغَ الْوُضُوءَ، ثُمَّ مَشَى إِلَى الصَّلَاةِ الْمَكْتُوبَةِ، فَصَلَّاهَا مَعَ الْجَمَاعَةِ غَفَرَ اللهُ لَهُ ذُنُوبَهُ» (رواه مسلم)

8. عَنْ أَبِي هُرَيْرَةَ عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: "مَنْ كَذَبَ عَلَيَّ مُتَعَمِّدًا فَلْيَتَبَوَّأْ مَقْعَدَهُ مِنَ النَّارِ" (متفق عليه)

9. عَنْ عَبْدِ اللهِ بْنِ مَسْعُودٍ، عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: "لَا يَدْخُلُ الْجَنَّةَ مَنْ كَانَ فِي قَلْبِهِ مِثْقَالُ ذَرَّةٍ مِنْ كِبْرٍ" (رواه مسلم)

10. عَنْ عُثْمَانَ رَضِيَ اللَّهُ عَنْهُ، عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: "خَيْرُكُمْ مَنْ تَعَلَّمَ الْقُرْآنَ وَعَلَّمَه" (رواه البخاري)

11. عَنْ أَبِي هُرَيْرَةَ، عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: "كَلِمَتَانِ خَفِيفَتَانِ عَلَى اللِّسَانِ، ثَقِيلَتَانِ فِي المِيزَانِ، حَبِيبَتَانِ إِلَى الرَّحْمَنِ: سُبْحَانَ اللَّهِ العَظِيمِ، سُبْحَانَ اللَّهِ وَبِحَمْدِهِ" (متفق عليه)

12. عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللَّهُ عَنْهُ، قَالَ: أَوْصَانِي خَلِيلِي صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ بِثَلَاثٍ: «صِيَامِ ثَلَاثَةِ أَيَّامٍ مِنْ كُلِّ شَهْرٍ، وَرَكْعَتَيِ الضُّحَى، وَأَنْ أُوتِرَ قَبْلَ أَنْ أَنَامَ» (متفق عليه)

13. عَنْ أَبِي هُرَيْرَةَ أَنَّ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: "أَقْرَبُ مَا يَكُونُ الْعَبْدُ مِنْ رَبِّهِ، وَهُوَ سَاجِدٌ، فَأَكْثِرُوا الدُّعَاء" (متفق عليه)

14. عَنْ ثَابِتِ بْنِ الضَّحَّاكِ، عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: "لَعْنُ الْمُؤْمِنِ كَقَتْلِهِ" (رواه مسلم)

15. عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللَّهُ عَنْهُ: أَنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: " قَالَ اللَّهُ عَزَّ وَجَلَّ: أَنْفِقْ أُنْفِقْ عَلَيْكَ" (متفق عليه)

16. عَنْ أَبِي هُرَيْرَةَ: عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: "مَا يُصِيبُ المُسْلِمَ، مِنْ نَصَبٍ وَلاَ وَصَبٍ، وَلاَ هَمٍّ وَلاَ حُزْنٍ وَلاَ أَذًى وَلاَ غَمٍّ، حَتَّى الشَّوْكَةِ يُشَاكُهَا، إِلَّا كَفَّرَ اللَّهُ بِهَا مِنْ خَطَايَاه" (متفق عليه)

17. عَنْ أَبِي هُرَيْرَةَ، قَالَ: قَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: " لَا تَدْخُلُونَ الْجَنَّةَ حَتَّى تُؤْمِنُوا، وَلَا تُؤْمِنُوا حَتَّى تَحَابُّوا، أَوَلَا أَدُلُّكُمْ عَلَى شَيْءٍ إِذَا فَعَلْتُمُوهُ تَحَابَبْتُمْ؟ أَفْشُوا السَّلَامَ بَيْنَكُم" (رواه مسلم)

18. عَنْ أَبِي سَعِيدٍ الْخُدْرِيِّ، أَنَّ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: "لَا يَنْظُرُ الرَّجُلُ إِلَى عَوْرَةِ الرَّجُلِ، وَلَا الْمَرْأَةُ إِلَى عَوْرَةِ الْمَرْأَةِ" (رواه مسلم)

19. عَنِ الصَّعْبِ بْنِ جَثَّامَةَ اللَّيْثِيِّ، أَنَّهُ أَهْدَى لِرَسُولِ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ حِمَارًا وَحْشِيًّا، وَهُوَ بِالأَبْوَاءِ، أَوْ بِوَدَّانَ، فَرَدَّهُ عَلَيْهِ، فَلَمَّا رَأَى مَا فِي وَجْهِهِ قَالَ: "إِنَّا لَمْ نَرُدَّهُ عَلَيْكَ إِلَّا أَنَّا حُرُمٌ" (متفق عليه)

20. عن حُذَيْفَةُ قال : سَمِعْتُ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُولُ: "لَا يَدْخُلُ الجَنَّةَ قَتَّات" (متفق عليه)

21. عن جابر بن عبد الله قال : قال رسول الله صلى الله عليه وسلم "لَا يَغْرِسُ مُسْلِمٌ غَرْسًا، وَلَا يَزْرَعُ زَرْعًا، فَيَأْكُلَ مِنْهُ إِنْسَانٌ، وَلَا دَابَّةٌ، وَلَا شَيْءٌ، إِلَّا كَانَتْ لَهُ صَدَقَةً" (رواه البخاري ومسلم)

22. عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللَّهُ عَنْهُ: أَنَّ رَجُلًا أَتَى النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَتَقَاضَاهُ، فَأَغْلَظَ فَهَمَّ بِهِ أَصْحَابُهُ، فَقَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: «دَعُوهُ، فَإِنَّ لِصَاحِبِ الحَقِّ مَقَالًا» (متفق عليه)

23. عن أبي قتادة رضي الله عنه قال : قال النبي صلى الله عليه وسلم «مَنْ سَرَّهُ أَنْ يُنْجِيَهُ اللهُ مِنْ كُرَبِ يَوْمِ الْقِيَامَةِ، فَلْيُنَفِّسْ عَنْ مُعْسِرٍ، أَوْ يَضَعْ عَنْهُ» (رواه مسلم)

24. عَنْ أَبِي هُرَيْرَةَ: أَنَّ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: "مَنْ غَشَّنَا فَلَيْسَ مِنَّا" (رواه مسلم)

25. عنْ أَبِي أُمَامَةَ، أَنَّ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: «مَنِ اقْتَطَعَ حَقَّ امْرِئٍ مُسْلِمٍ بِيَمِينِهِ، فَقَدْ أَوْجَبَ اللهُ لَهُ النَّارَ، وَحَرَّمَ عَلَيْهِ الْجَنَّةَ» فَقَالَ لَهُ رَجُلٌ: وَإِنْ كَانَ شَيْئًا يَسِيرًا يَا رَسُولَ اللهِ؟ قَالَ: «وَإِنْ قَضِيبًا مِنْ أَرَاكٍ» (رواه مسلم)

26. عن أبي موسى رضي الله عنه أَنَّ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، بَعَثَ مُعَاذًا وَأَبَا مُوسَى إِلَى اليَمَنِ قَالَ: «يَسِّرَا وَلاَ تُعَسِّرَا، وَبَشِّرَا وَلاَ تُنَفِّرَا، وَتَطَاوَعَا وَلاَ تَخْتَلِفَا» (متفق عليه)

27. عَنْ أَبِي مُوسَى الأشعري رضي الله عنه، عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، قَالَ: «مَنْ حَمَلَ عَلَيْنَا السِّلاَحَ فَلَيْسَ مِنَّا» (متفق عليه)

28. عن عبد الله بن مغفل رضي الله عنه أَنَّ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ نَهَى عَنِ الْخَذْفِ، وَقَالَ: "إِنَّهَا لَا تَصِيدُ صَيْدًا، وَلَا تَنْكَأُ عَدُوًّا، وَلَكِنَّهَا تَكْسِرُ السِّنَّ، وَتَفْقَأُ الْعَيْنَ" (متفق عليه)

29. عن أَنَسٌ رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ: " خَدَمْتُ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ عَشْرَ سِنِينَ، فَمَا قَالَ لِي: أُفٍّ" (متفق عليه)

30. عَنْ أَبِي هُرَيْرَةَ، أَنَّ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، قَالَ: «إِذَا قَامَ أَحَدُكُمْ مِنْ مَجْلِسِهِ، ثُمَّ رَجَعَ إِلَيْهِ فَهُوَ أَحَقُّ بِهِ» (رواه مسلم)

31. عَنْ أَبِي هُرَيْرَةَ، أَنَّ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: «حَقُّ الْمُسْلِمِ عَلَى الْمُسْلِمِ سِتٌّ، إِذَا لَقِيتَهُ فَسَلِّمْ عَلَيْهِ، وَإِذَا دَعَاكَ فَأَجِبْهُ، وَإِذَا اسْتَنْصَحَكَ فَانْصَحْ لَهُ، وَإِذَا عَطَسَ فَحَمِدَ اللهَ فَسَمِّتْهُ، وَإِذَا مَرِضَ فَعُدْهُ وَإِذَا مَاتَ فَاتَّبِعْهُ» (رواه مسلم)

32. عَنْ أَبِي سَعِيدٍ الخُدْرِيِّ رَضِيَ اللَّهُ عَنْهُ: أَنَّ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: « أَعْطُوا الطَّرِيقَ حَقَّهُ» قَالُوا: وَمَا حَقُّ الطَّرِيقِ يَا رَسُولَ اللَّهِ؟ قَالَ: «غَضُّ البَصَرِ، وَكَفُّ الأَذَى، وَرَدُّ السَّلاَمِ، وَالأَمْرُ بِالْمَعْرُوفِ، وَالنَّهْيُ عَنِ المُنْكَرِ» (متفق عليه)

33. عَنْ عَبْدِ اللَّهِ بْنِ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُمَا: أَنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: «مَا حَقُّ امْرِئٍ مُسْلِمٍ لَهُ شَيْءٌ يُوصِي فِيهِ، يَبِيتُ لَيْلَتَيْنِ إِلَّا وَوَصِيَّتُهُ مَكْتُوبَةٌ عِنْدَهُ» (متفق عليه)

34. عَنِ ابْنِ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُمَا أن رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قال: «أَلاَ، إِنَّ اللَّهَ يَنْهَاكُمْ أَنْ تَحْلِفُوا بِآبَائِكُمْ، فَمَنْ كَانَ حَالِفًا فَلْيَحْلِفْ بِاللَّهِ، وَإِلَّا فَلْيَصْمُتْ» (متفق عليه)

35. عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللَّهُ عَنْهُ، قَالَ: «مَا عَابَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ طَعَامًا قَطُّ، إِنِ اشْتَهَاهُ أَكَلَهُ وَإِلَّا تَرَكَهُ» (متفق عليه)

36. عن البَرَاءَ بن عازب رضي الله عنه قال : كَانَ رَسُولُ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: «أَحْسَنَ النَّاسِ وَجْهًا وَأَحْسَنَهُ خَلْقًا، لَيْسَ بِالطَّوِيلِ البَائِنِ، وَلاَ بِالقَصِيرِ» (متفق عليه)

37. عن عَمْرُو بْنُ العَاصِ رَضِيَ اللَّهُ عَنْهُ قال : سألت النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ" أَيُّ النَّاسِ أَحَبُّ إِلَيْكَ؟ قَالَ: «عَائِشَةُ»، فَقُلْتُ: مِنَ الرِّجَالِ؟ فَقَالَ: «أَبُوهَا»، قُلْتُ: ثُمَّ مَنْ؟ قَالَ: «ثُمَّ عُمَرُ بْنُ الخَطَّابِ» (متفق عليه)

38. عن أنس بن مالك رضي الله عنه قَالَ: كَانَ أَكْثَرُ دَعْوَةٍ يَدْعُو بِهَا يَقُولُ: «اللهُمَّ آتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً وَفِي الْآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ» (متفق عليه)

39. عَنْ أَبِي هُرَيْرَةَ، أَنَّ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، قَالَ: " إِذَا مَاتَ الْإِنْسَانُ انْقَطَعَ عَنْهُ عَمَلُهُ إِلَّا مِنْ ثَلَاثَةٍ: إِلَّا مِنْ صَدَقَةٍ جَارِيَةٍ، أَوْ عِلْمٍ يُنْتَفَعُ بِهِ، أَوْ وَلَدٍ صَالِحٍ يَدْعُو لَهُ " (رواه مسلم)

40. عَنْ جَابِرٍ بن عبد الله قَالَ: سَمِعْتُ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، يَقُولُ: «يُبْعَثُ كُلُّ عَبْدٍ عَلَى مَا مَاتَ عَلَيْهِ» (رواه مسلم)

பொருளடக்கம்

1	முன்னுரை	1
2	ஹதீஸ் - 01	3
3	ஹதீஸ் - 02	5
4	ஹதீஸ் - 03	7
5	ஹதீஸ் - 04	9
6	ஹதீஸ் - 05	11
7	ஹதீஸ் - 06	13
8	ஹதீஸ் - 07	15
9	ஹதீஸ் - 08	17
10	ஹதீஸ் - 09	19
11	ஹதீஸ் - 10	21
12	ஹதீஸ் - 11	23
13	ஹதீஸ் - 12	25
14	ஹதீஸ் - 13	27
15	ஹதீஸ் - 14	29
16	ஹதீஸ் - 15	31
17	ஹதீஸ் - 16	33
18	ஹதீஸ் - 17	35
19	ஹதீஸ் - 18	37
20	ஹதீஸ் - 19	38
21	ஹதீஸ் - 20	40
22	ஹதீஸ் - 21	42
23	ஹதீஸ் - 22	44
24	ஹதீஸ் - 23	46
25	ஹதீஸ் - 24	48
26	ஹதீஸ் - 25	50
27	ஹதீஸ் - 26	52
28	ஹதீஸ் - 27	54
29	ஹதீஸ் - 28	56
30	ஹதீஸ் - 29	58

31	ஹதீஸ் - 30	60
32	ஹதீஸ் - 31	62
33	ஹதீஸ் - 32	64
34	ஹதீஸ் - 33	66
35	ஹதீஸ் - 34	68
36	ஹதீஸ் - 35	70
37	ஹதீஸ் - 36	71
38	ஹதீஸ் - 37	73
39	ஹதீஸ் - 38	75
40	ஹதீஸ் - 39	77
41	ஹதீஸ் - 40	79
42	முடிவுரை	81
43	40 ஹதீஸ்களும் ஒரே பார்வையில்	83
44	பொருளடக்கம்	89